# MAR GREGORIOS COLLEGE
# OF ARTS & SCIENCE

**Block No.8, College Road, Mogappair West, Chennai – 37**

**Affiliated to the University of Madras**
**Approved by the Government of Tamil Nadu**
**An ISO 9001:2015 Certified Institution**

# DEPARTMENT OF TAMIL

**SUBJECT NAME: TAMIL III**

**SEMESTER: III**

**PREPARED BY:PROF.KANNAGI/PROF.FRIDA/**
**PROF.RAJAVELU**

## பொருளடக்கம்

### அலகு I

1. காரைக்கால் அம்மையார் - அற்புதத்திருவந்தாதி (5 பாடல்கள்)

2. தேவாரம் - திருஞானசம்பந்தர் (11 பாடல்கள்)

3. திருநாவுக்கரசர் - ‘மாசில்வீணையும்’ எனத்தொடங்கி (10 பாடல்கள்)

4. சுந்தரர் - ‘பித்தாபிறைசூடி’ எனத்தொடங்கி 10 பாடல்கள்

5. மாணிக்கவாசகர் - திருப்பள்ளியெழுச்சி 10 பாடல்கள்

### அலகு 2

1. ஆண்டாள் - -

I - நாச்சியார்திருமொழி - (ஏழாம்பத்து)

2. பொய்கையாழ்வார்- முதல்பாடல் (முதல் திருவந்தாதி)

3. பூதத்தாழ்வார்- முதல்பாடல்(இரண்டாம் திருவந்தாதி)

4. பேயாழ்வார் - முதல்பாடல் (மூன்றாம் திருவந்தாதி)

5. நம்மாழ்வார் - முதல்பத்து - நான்காம் திருமொழி (முதல் 5 பாடல்கள்)

**அலகு 3**

1. தாயுமானவர் - பைங்கிளி கண்ணி (5 கண்ணிகள்)

2. வள்ளலார் - திருவருட்பா - பிள்ளைச் சிறு விண்ணப்பம் (1-5)

3. அருணகிரிநாதர்

விநாயகர்துதி

“நினதுதிருவடி...”எனத்தொடங்கும் 5

ஆம்பாடல்

**அலகு 4**

1. சித்தர்பாடல்கள் - திருமூலர் - திருமந்திரம் (270,271,274,275,285)

2. குணங்குடிமஸ்தான் - பராபரக்கண்ணி (முதல் பத்துக் கண்ணிகள்)

3. வேதநாயகம்பிள்ளை

தாய் தந்தையர் வணக்கம் 25 -

32 வரிகள்

(பெண்மதிமாலை)

**அலகு 5**

1. முத்தொள்ளாயிரம்

2. தமிழ்விடுதூது - முதல்16கண்ணிகள்

3. நந்திக்கலம்பகம் - (61, 96, 100, 105, 110)

/ **தமிழிலக்கியவரலாறு**

1. பக்தி இலக்கியம் (சைவம், வைணவம், சித்தர்கள், இஸ்லாம், கிறித்துவம்)


2. சிற்றிலக்கியங்கள்

## II மொழிப்பயிற்சியும் மொழிபெயர்ப்பும்

1. ஒருபொருள் குறித்த பலசொல்
2. பலபொருள் குறித்த ஒருசொல்
3. பிறமொழிச்சொல் நீக்கல்
4. அலுவலகக் கடிதம் வரைதல்
5. தமிழில்மொழிபெயர்த்தல்

## அலகு -1

## 1. அற்புதத் திருவந்தாதி - காரைக்காலம்மையார்



அற்புதத் திருவந்தாதி என்னும் நூல் சைவத்திருமுறைகளில் பதினோராம் திருமுறைத் தொகுதியில் அமைந்துள்ளது. இந்நூலை

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான காரைக்கால் அம்மையார் எழுதியுள்ளார். இந்நூல் அந்தாதி முறையில் பாடப்பெற்ற



முதல் நூல் என்பதால் ஆதி அந்தாதி என்றும்,இறைவனின் மீது பாடப்பெற்றதால் திருவந்தாதி என்றும் அழைக்கப்படுகிறது.இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. இதன் காலம் கி.பி ஆறாம் நூற்றாண்டு. இந்நூல் 101 வெண்பாப் பாடல்களைக் கொண்டது. இவ் அந்தாதி சைவ நெறி குறித்தும், சிவபெருமானை முழுமையாகச் சரணடைவதைக்

குறித்தும் கூறுகின்றது. சிவபெருமானின் திருஉருவச் சிறப்பினையும், திருவருட்சிறப்பினையும், இறைவனின் குணத்தையும் விரிவாக இந்நூல் பாடுகிறது.காரைக்காலம்மையார் காரைக்கால் அம்மையார் மூன்று பெண் நாயன்மார்களில் ஒருவரும் மூத்தவருமாவார் கயிலைகயிலை

மலையின் மீது கைகளால் நடந்து சென்றவரை,சிவபெருமான் அம்மையே என்று அழைத்ததாலும், காரைக்கால் மாநகரில் பிறந்தவர்

என்பதாலும் காரைக்கால் அம்மையார் என்று வழங்கப்பெறுகிறார். பரமதத்தன் என்பவரை மணந்து இல்லற வாழ்வில் ஈடுபட்டிருந்தவர், ஒரு நாள் கணவன் கொடுத்தனுப்பிய இரு மாம்பழங்களில்

ஒன்றினைச் சிவனடியாருக்குப் படைத்துவிட்டு, அந்த மாம்பழத்தினைக் கணவன் கேட்க, இறைவனிடம் வேண்டி மாம்பழத்தினைப் பெற்ற

நிகழ்விலிருந்து இறைவனைச் சரணடைந்தார்.இவர் இசைத்தமிழால் இறைவனைப் பற்றி முதன்முதலாகப் பாடியவராகவும், தமிழுக்கு அந்தாதி எனும் இலக்கண முறையை அறிமுகம் செய்தவராகவும் அறியப்பெறுகிறார். அற்புதத்திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திரு இரட்டை மணிமாலை போன்ற நூல்களைத் தந்து சைவத்தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளார். இவருடைய பதிக முறைகளைப் பின்பற்றியே பிற்காலத்தில் தேவாரப் பதிகங்கள் இயற்றப்பட்டன.

# அற்புதத்திருவந்நதாதி

(1) தக்ஷிணாமூர்த்தி

குரவே ஸர்வ லோகானாம் பிஷஜே
பவரோகிணாம் ।

நிதயே ஸர்வ வித்யானாம் தக்ஷிணா மூர்த்தயே
நம ॥

5

(2) நடராஜர்

உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்

நிலவு லாவிய நீர்மலி வேணியன்

அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்

மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

(3) சைவ ஸமயாசார்யார்கள்

பூழியர்கோன் வெப்பொழிந்த புகலியர்கோன்
கழல் போற்றி

ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரா னடி போற்றி

வாழி திரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி

ஊழிமலி திருவாத வூரர் திருத் தாள் போற்றி.

ஊ

(4) சைவ ஸ்தாபனாசார்யவர்யர் ஸ்ரீ ஹரதத்தர்

அறுகுணபூர்ண னாவான் அருமறை வணக்கம் கூறி

முறையிடு மீசன் த்யானம் மூவெழு யாகங் கட்கும்

இறை பர மேசன் என்றும், மறைமொழி காயத் ரீயும்

பிறையணி பவனைப் போற்றும் பெருமைகள் பலவும் சொன்ன

குருஹரா தத்தா சார்யர் திருவடி தலைமேற் கொள்வாம்.

(5) அடியார்கள், சேக்கிழார்

தில்லைவா: ழந்தணரே முதலாகச் சீர் படைத்த

தொல்லைய தாந் திருத்தொண்டத்
தொகைபடியார் பதம் போற்றி

ஒல்லையவர். புராண கதை உலகறிய
விரித்துரைத்த

செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார் அடி போற்றி.

## 2. தேவாரம்




## திருத்தில்லைப் பதிகம் - திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர்

சைவ

சமயத்தவர்களால் நாயன்மார்கள் என

அழைக்கப்படும் அறுபத்து மூவருள் ஒருவர். தேவாரம் மூவருள் முதலாமவர். இவர் கி.பி.

ஏழாம் நூற்றாண்டில், சீர்காழி என்னும் ஊரில் பிறந்தார். இவரது தந்தையார் சிவபாத

இருதயர், தாயார் பகவதி அம்மையார். இவர் மூன்று வயதுக் குழந்தையாக

இருந்தபோது, தந்தையாருடன் கோயிலுக்குச் சென்றதாகவும், அங்கே குழந்தையைக்

கரையில் அமரவிட்டுக் குளிக்கச் சென்ற தந்தையார், சிறிது நேரம் நீருள் மூழ்கியிருந்த

சமயம், தந்தையைக் காணாத குழந்தை அம்மை அப்பா என்று கூவி அழுததாகவும்,

அப்போது உமாதேவியார்,

சிவபெருமானுடன்

இவர் முன் காட்சி கொடுத்து

ஞானப்பாலூட்டியதாகவும் சொல்லப்படுகிறது. அதனால் தமிழில் அறிவுசேரர் என்று

பொருள்பட திருஞானசம்பந்தர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.

மகன்மை நெறியில் இறைவனை வழிபட்டார். இவர் பாடிய பதினாறாயிரம்

பதிகங்களுள் 384 பதிகங்களே கிடைத்துள்ளன. இவர் பாடிய பதிகங்கள் பன்னிரு

திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளாக வைத்துப்போற்றப்படுகிறது.

வேறு பெயர்கள் ஆளுடைய பிள்ளை,காழி

வள்ளல் என்ற வேறு பெயர்களாலும்

வழங்கப்படுகிறார். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்று

பாராட்டப்பட்டார். ஆதி சங்கர்ர் தன்து சௌந்தர்ய லகரியில் இவரை திராவிட சிசு

என்று குறிப்பிட்டுள்ளார்.இறை ஒளியில் கலந்தார்

பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க தனது பதினாறாவது வயதில் திருநல்லூர்

நம்பாண்டர் மகள் சொக்கியாரை மணம்

முடிக்கச் சம்மதித்தார்.பாடி

திருப்பெருமணநல்லூரில் திருமணத்திற்கு முன் ஒரு பதிகம்

திருமணக்கோலத்துடன் சுற்றம் சூழ இறைஒளியில் கலந்து விட்டார்.

அற்புதங்கள் மூன்று வயதில் உமையம்மையாரிடம் திருமுலைப்பால்

உண்டமை, சிவபெருமானிடத்தே

பொற்றாளமும்,முத்துப்பல்லக்கும்,

முத்துச்சின்னமும்,முத்துக்குடையும்,

முத்துப்பந்தரும் பெற்றமை,

வேதாரணியத்தில் திருக்கதவு அடைக்கப் பாடியமை, பாண்டியனுக்குக் கூனையும் சுரத்தையும் போக்கியமை,தேவாரத் திருவேட்டை அக்கினியில் இட்டுப் பச்சையாய் எடுத்தமை, வைகையிலே

திருவேட்டை விட்டு எதிரேறும்படி செய்தமை,சிவபெருமானிடத்தே படிக்காசு

பெற்றமை, விடத்தினால் இறந்த வணிகனை உயிர்ப்பித்தமை.

திருஞானசம்பந்தர் 220 பதிகளுக்குச் சென்று இறைவனை வழிபட்டதாகக்

கூறப்படுகின்றது. அவற்றுள் சிதம்பரத்தில் உள்ள நடராசப் பெருமானைப் பாடிய திருத்தில்லைப் பதிகத்திலிருந்து பதினொரு பாடல்கள் இங்கே பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

1. கற்றாங்கு எரி ஓம்பி, கலியை வாராமே

செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய

முற்றா வெண் திங்கள் முதல்வன் பாதமே

பற்றா நின்றாரைப் பற்றா, பாவமே.

2. பறப்பைப் படுத்து எங்கும் பசு வேட்டு எரி ஓம்பும் சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய பிறப்பு இல் பெருமானை பின் தாழ்சடையானை

மறப்புஇலார் கண்டீர் மையல் தீர்வாரே.

3. மை ஆர் ஒண்கண்ணார் மாடம் நெடுவீதிக்

கையால் பந்து ஓச்சும் கழி சூழ் தில்லையுள்,

பொய்யா மறை பாடல் புரிந்தான், உலகு ஏத்தச்

செய்யான், உறை கோயில் சிற்றம்பலம்தானே.

4. நிறை வெண்கொடி மாட நெற்றி நேர் தீண்டப்

பிறை வந்து இறை தாக்கும் பேரம்பலம், தில்லைச்

சிறைவண்டு அறை ஓவாச் சிற்றம்பலம், மேய

இறைவன் கழல் ஏத்தும் இன்பம் இன்பமே.

5. செல்வ நெடுமாடம் சென்று சேண் ஓங்கிச்

செல்வ மதி தோய, செல்வம் உயர்கின்ற,

செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய

செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே.

6. வரு மாந்தளிர் மேனி மாது ஓர்பாகம் ஆம்

திரு மாந் தில்லையுள், சிற்றம்பலம் மேய

கருமான் உரி-ஆடைக் கறை சேர் கண்டத்து எம்

பெருமான் கழல் அல்லால் பேணாது, உள்ளமே.

7.

அலை ஆர் புனல் சூடி, ஆகத்து ஒருபாகம்

மலையான் மகளோடும் மகிழ்ந்தான், உலகு ஏத்தச்

சிலையால் எயில் எய்தான், சிற்றம்பலம் தன்னைத்

தலையால் வணங்குவார் தலை ஆனார்களே.

**8.**கூர்வாள்கூர்வாள் அரக்கன் தன் வலியைக் குறைவித்து,சீராலே மல்கு சிற்றம்பலம் மேய

நீர் ஆர் சடையானை நித்தல் ஏத்துவார்

தீரா நோய் எல்லாம் தீர்தல் திண்ணமே.

9. கோள் நாக(அ)ணையானும் குளிர்தாமரையானும்

காணார் கழல் ஏத்த, கனல் ஆய் ஓங்கினான்,

சேணார் வாழ் தில்லைச் சிற்றம்பலம் ஏத்த,

மாணா நோய் எல்லாம் வாளா மாயுமே.

10. பட்டைத் துவர் ஆடை, படிமம்,
கொண்டாடும்

முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே,

சிட்டர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய

நட்டப்பெருமானை நாளும் தொழுவோமே.

11. ஞாலத்து உயர் காழி ஞானசம்பந்தன்

சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலம் மேய

சூலப்படையானைச் சொன்ன தமிழ்மாலை

கோலத்தால் பாட வல்லார் நல்லாரே.

## அருஞ்சொற்பொருள்

1. கற்று - வேதம் முதலிவற்றை ஓதி, ஆங்கு எரியோம்பி - அந்நெறியிலே நின்று

வேள்வியைச் செய்து, கலி - பாவம், பற்றா - பற்றுக்கோடாக.

2. பறப்பை - வேள்விச்சாலை, பசுவேட்டு - ஆன்ம போகத்தைக் கொன்று,

எரிஓம்பும் -சிவ அக்கினியை வளர்க்கும்,

சிறப்பர் - சிறப்பினை உடைய

தில்லைவாழ் அந்தணர்கள்.

3. மையார் ஒண் கண்ணார் - மை பூசிய ஒளி பொருந்திய கண் உடைய பெண்கள்,

பொய்யா மறை - என்றும் பொய்க்காத வேதம்,

புரிந்தான் - விரும்பினான்.

4.

அறை - ஓ5. சேண் - ஆகாயம்

6. திருமாந்தில்லை - திருமகளோடு கூடிய பெரிய தில்லை

7. சிலை - மேருவில்லையாகிய வில்

8. கூர்வாள் அரக்கன் - இராவணன்

9. கோண் நாகணையான் - வளைந்த நாகத்தை அணையாக்க் கொண்ட திருமால்,

சேணார் -தேவர்கள், மாணாநோய் - மாட்சிமை தராத நோய்கள்

10. பட்டைத்துவர் - மரப்பட்டையிலிருந்து தயாரிக்கப்படும் காவி, படிம்ம் -

நோன்பு, முட்டைக்கட்டுரை - அறியாமையோடு கூடிய சொல், சிட்டம் -

ஆசாரசீலர்.

11. சீலம் - ஒழுக்கம், கோலம் - அழகு.

## 3.திருநாவுக்கரசர் தேவாரம்

திருநாவுக்கரசர் கி.பி ஏழாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில்,தமிழ் நாட்டில் பக்தி

இயக்கத்தை வளர்த்த சிவனடியார்களுள் ஒருவரும்,63 நாயன்மார்களில் ஒருவரும் ஆவார். தேவார மூவருள் இரண்டாமவர். திருநாவுக்கரசர் சோழநாட்டின்

திருமுனைப்பாடி பகுதியிலிருந்த கடலூர்

மாவட்டத்தில் உள்ள திருவாமூர் எனும் ஊரில் சைவ வெள்ளாளர் குலத்தில்

புகழனார் மற்றும் மாதினியாருக்கு மகனாகப் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் மருண்நீக்கியார் இளமையில் சைவசமயத்தினை விட்டு சமண சமயத்தவரானார். சமண நூல்களைக் கற்று அம்மத தலைவர்களில் ஒருவராகவும் இருந்தார். அப்போது

தருமசேனர் என்று அழைக்கப்பட்டார்.

தருமசேனரின் தமக்கையார் திலகவதியார். இவர் சிவபக்தராக இருந்தார்.அதனால் சமண சமயத்தில் தன்னுடைய தம்பி இணைந்ததை எண்ணி வருந்தி இறைவனிடம்

முறையிட்டார்.அதனால் தருமசேனருக்கு

கடுமையான சூலை நோய் (வயிற்று

வலி) ஏற்பட்டது. சமண மடத்தில் செய்யப்பட்ட சிகிச்சைகள்

பலனளிக்காமல் போகவும்,

திலகவதியாரின் ஆலோசனைப்படி

தருமசேனர் “கூற்றாயினவாறு விலக்ககலீர்” எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். இப்பாடலால் பிறகு சைவ

சமயத்தவராகி நாவுக்கரசர் என்று நோய் தீர்ந்தது. அதன் அழைக்கப்பட்டார்.

பல்வேறு சிவாலயங்களுக்குச் சென்று தேவாரப் பதிகங்களைப் பாடினார்.

அத்துடன் சிவாலயங்களை தூய்மை செய்யும் பணியான உழவாரப் பணியை

மேற்கொண்டார். அதனால் “உழவாரத் தொண்டர்” என அழைக்கப்பட்டார். இவர்

இறைவனை தொண்டு வழியில், அடிமை நெறியல் வழிபட்டார். திருநாவுக்கரசர்

49,000 தேவாரப் பதிகங்களை பாடியுள்ளார். இவர் பாடிய தேவாரப் பாடல்கள் 4, 5, 6 ஆகிய மூன்று திருமுறைகளில் வகுக்கப்பட்டுள்ளன.

சமயத் தொண்டு புரிந்த திருநாவுக்கரசர் 81ஆவது வயதில் திருப்புகலூரில் சித்திரைச் சதயத்தில் இறைவனடி

கலந்தார்.

வேறு பெயர்கள்

தருமசேனர் - சமண சமயத்தை தழுவிய போது கொண்ட பெயர்

நாவுக்கரசர், திருநாவுக்கரசர்

தேவாரப் பாடல்களை பாடியமையால் பெற்ற பெயர்

அப்பர் - திருஞானசம்பந்தர் அழைத்தமையால் வந்த பெயர்

உழவாரத் தொண்டர் சிவாலயங்களை தூய்மை செய்யும் பணியை

செய்தமையால் பெற்ற பட்டப்பெயர்.

அற்புதங்கள்

சமணர்களாலே 7 நாட்கள் சுண்ணாம்பு அறையில் அடைத்து வைத்திருந்தும் வேகாது உயிர் பிழைத்தார்.

.

சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டும் சாகாது உயிர் பிழைத்தார்.

.

சமணர்கள் விடுத்த கொலை யானை வலம் வந்து வணங்கிச் சென்றது

• சமணர்கள் கல்லிற் சேர்த்துக்கட்டிக் கடலில் விடவும் அக்கல்லே தோணியாகக் கரையேறியது.

.

சிவபெருமானிடத்தே படிக்காசு பெற்றது

.

வேதாரணியத்திலே திருக்கதவு திறக்கப் பாடியது.

- காசிக்கு அப்பால் உள்ள ஒரு தடாகத்தினுள்ளே மூழ்கி திருவையாற்றிலே ஒரு

வாவியின் மேலே தோன்றிக் கரையேறியது.

1. மாசு இல் வீணையும், மாலை மதியமும்,

வீசு தென்றலும், வீங்கு இளவேனிலும்,

மூசு வண்டு அறை பொய்கையும், போன்றதே-

ஈசன், எந்தை, இணைஅடி நீழலே.

2. நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்;

நமச்சிவாயவே நான் அறி விச்சையும்;

நமச்சிவாயவே நா நவின்று ஏத்துமே;

நமச்சிவாயவே நன்நெறி காட்டுமே.

3. ஆள் ஆகார்; ஆள் ஆனாரை அடைந்து உய்யார்;

மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்;

தோளாத(ச்) சுரையோ, தொழும்பர் செவி?

வாளா மாய்ந்து மண் ஆகிக் கழிவரே!

4. நடலை வாழ்வுகொண்டு என் செய்திர்? நாண் இலீர்?

சுடலை சேர்வது சொல் பிரமாணமே;

கடலின் நஞ்சு அமுது உண்டவர் கைவிட்டால்,

உடலினார் கிடந்து ஊர் முனி பண்டமே

5. பூக் கைக் கொண்டு அரன் பொன் அடி போற்றிலார்;

நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்;

ஆக்கைக்கே இரை தேடி, அலமந்து,

காக்கைக்கே இரை ஆகி, கழிவரே!

6. குறிகளும்(ம்), அடையாளமும், கோயிலும்,

நெறிகளும்(ம்), அவர் நின்றது ஓர் நேர்மையும்,

அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்,

பொறி இலீர்! மனம் என்கொல், புகாததே?

7. வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும்,

தாழ்த்தச் சென்னியும், தந்த தலைவனைச்

சூழ்த்த மா மலர் தூவித் துதியாதே

வீழ்த்தவா, வினையேன் நெடுங் காலமே!

8. எழுது பாவை நல்லார் திறம் விட்டு, நான்,
தொழுது போற்றி, நின்றேனையும் சூழ்ந்து
கொண்டு,

உழுத சால்வழியே உழுவான் பொருட்டு

இழுதை நெஞ்சம் இது என் படுகின்றதே!

9. நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சுளே

புக்கு நிற்கும் பொன் ஆர் சடைப் புண்ணியன்,

பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு

நக்கு நிற்பவர், அவர்தம்மை நாணியே.

10.விறகில்-தீயினன், பாலில் படு நெய் போல்

மறைய நின்றுளன்மா மணிச்சோதியான்;

உறவுகோல் நட்டு, உணர்வு கயிற்றினால்

முறுக வாங்கிக் கடைய, முன் நிற்குமே.

அருஞ்சொற்பொருள்

1. மாசில் - சுர இலக்கணங்களில் சிறிதும் வழுவாத, மாலைமதி - முழுமதி, வீங்கு - பெருகிய, இளவேனில்

சித்திரை, வைகாசி மாதங்கள், மூசுவண்டு

நீர்ப்பூக்களில் மொய்க்கின்ற வண்டுகள், அறை - ஒலிக்கின்ற, பொய்மை

நீர்நிலை.

2. நானறிவிச்சை நான் அறிந்தவனாகிய மந்திரம் அல்லது கலையுணர்வு,

நன்னெறி - ஞானம், வீடுபேறடையும் வழி.

3. ஆளாகார் -தாம் அடியவராக மாட்டார், அடைந்துய்யார் -அடியார்க்கு

அடியவராய் இருந்து உய்நெறிகாணார். மீளா ஆள் என்றும் மாறாத

அடிமைத்திறம், மெய்மையுள் -இறைவனது தன்மையின்கண், தோளாத

துளையிடப்படாத, சுரை - உட்குழி, தொழும்பர் குற்றேவல் செய்வோர்,

வாளா - பயனற்று, தொழும்பர் - அடியவர்.

4. நடலை துன்பம், நாணலீர் வெட்கமில்லாதவர்கள், சுடலை

இடுகாடு, ஊர்முனிபண்டம்

பிணம் என்று பேரிட்டு ஊர்மக்களால் வெறுக்கப்படும் பொருள்.

5. ஆக்கை - உடல், அலமந்து - வருந்தி, கழிவர் - அழிந்தொழிவர்.

6. குறிகளும் - கடவுள் திருவுருவங்களும், அடையாளம் - விடை கொடி முதலிய

சின்னங்கள், ஆரணம்

வேதங்களில் கூறிய உபதேசங்கள், பொறியிலீர்

ஞானப்பொறி இல்லாதவர்கள்.

7. மடநெஞ்சு - அறியாமையின்பாற் பட்ட மனம், சென்னி -தலை, சூழ்த்த மலர் -

ஆராய்ந்து எடுத்த மலர்.

8. எழுது - நன்றாகத் தீட்டப்பட்ட, இழுதை - அறியாமை.

9. நெக்கு - மனம் உருகி, பொன்னார்சடை - அழகு பொருந்திய ஆடை, பொக்கம்

- பொய், நக்கு நிற்பார் - ஏளன நகை புரிவார்.

10.விறகில்தீயின் - விறகிலிருந்து மறைந்திருக்கும் நெருப்பு, முறுக - நன்றாக.

## 4.சுந்தரர்

சுந்தரமூர்த்தி நாயனார் என்பவர் சைவசமயத்தில் போற்றப்படும் சமயக்குரவர்

நால்வரில் மூன்றாமவர். அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவர். திருமுனைப்பாடி

நாட்டிலுள்ள திருநாவலூர் எனும் ஊரில் சடையனார் இசைஞானியார்

தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் ஆதி சைவர் எனும் குலத்தினை

சேர்ந்தவர். இவரது இயற்பெயர் நம்பியாரூரன். இவருடைய அழகினைக் கண்டு

சிவபெருமானே சுந்தரர் என்று

அழைத்தமையால்,அப்பெயரிலேயே அறியப்படுகிறார். சுந்தரர் சிறுவயதில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த போது,திருமுனைப்பாடி அரசர் நரசிங்கமுனையரையர் கண்டார். சிறுவன் சுந்தரனை அரண்மனைக்கு அழைத்துச் சென்று இளவரசனைப் போல அனைத்துக்

கலைகளையும் கற்றுத் தந்தார்.

தடுத்தாட்கொள்ளல் மணப்பருவம் அடைந்தபோது சுந்தரருக்கு புத்தூரில் உள்ள சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை திருமணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. மணநாளன்று முதியவர் ஒருவர் வடிவில் அங்கு வந்த

இறைவன், சுந்தரருடைய பாட்டனார் எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட ஒரு ஓலையைக் காட்டிச்

சுந்தரரும், அவர் வழித்தோன்றல்களும் தனக்கு அடிமை என்றார். திருமணம் தடைப்பட, சுந்தரரை அழைத்துக்கொண்டு கோயிலுள் நுழைந்த வயோதிகர் திடீரென

மறைந்தார்.இறைவனே வந்து தன்னைத் தடுத்தாட் கொண்டதை உணர்ந்த சுந்தரர், “பித்தா பிறை சூடி” என்ற தமது முதல் தேவாரப் பதிகத்தைப் பாடித் துதித்தார். பாடல்களின் மூலமாக இறைவனை தம்முடைய நண்பராக்கிக்

கொண்டார். சிவத் தலங்கள் தோறும்

சென்று தேவாரப் பதிகங்கள் பாடி இறைவனைப் பணிந்தார். இறைவன் பால் இவர் கொண்டிருந்த பக்தி “சக மார்க்கம்” என்று சொல்லப்படுகின்ற தோழமை வழியைச்

சார்ந்தது. இவருடைய காலம் கி.பி.எட்டாம் நூற்றாண்டு. திருமணங்கள்

திருவாரூரில் பதியிலார் குலத்தைச் சார்ந்த பரவையார் என்ற பெண்ணையும்,

திருவொற்றியூரில், வேளாளர் குலத்தைச் சார்ந்த ‘சங்கிலியார்’ என்ற பெண்ணையும்

சிவனருள் துணை கொண்டு திருமணம் செய்து கொண்டார்.

பாடிய பாடல்கள்

இவர் சிவபெருமான் மீது பாடிய பாடல்கள் 38000 என்று கூறுகின்றனர்.

அவற்றில் கிடைத்த பதிகங்கள் 101.

இவர் பாடிய தேவாரங்கள் 7 ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவர்

இயற்றிய திருத்தொண்டத்

தொகை என்னும் நூலில் 60 சிவனடியார்கள் பற்றியும், 9 தொகை அடியார்கள் பற்றியும் குறிப்புகள் உள்ளன.

இந்நூலின் துணை கொண்டே சேக்கிழார் பெரியபுராணம் எனும் நூலை இயற்றினார். அதில் சுந்தர

மூர்த்தி நாயனாரையும், அவரது பெற்றோரான சடையனார், இசை ஞானியார் ஆகிய

மூவரையும் இணைத்து சிவதொண்டர்களின் எண்ணிக்கையை 63 என கையாண்

**முக்தி**

சுந்தரர் தனது 18 ஆவது வயதில் சிவனடி சேர அடைந்திட பதிகம் பாடினார்.

சிவபெருமான் வெள்ளை யானையைச் சுந்தரருக்கு அனுப்ப, அதில் ஏறி கைலாயம் சென்றார். அங்கிருந்த சிவனும் பார்வதியும் அவரை வரவேற்று முக்தியளித்தனர்.
அற்புதங்கள்

1. செங்கற்களைப் பொன்னாகப் பெற்றுக் கொண்டது

2. சிவபெருமான் கொடுத்தருளிய பன்னீராயிரம்

பொன்னை விருத்தாச்சலத்தில் உள்ள ஆற்றிலே போட்டு திருவாரூர்க்

குளத்தில் எடுத்தது.

3. காவிரியாறு பிரிந்து வழிவிடச் செய்தது.

4. அவிநாசியில் முதலை விழுங்கிய குழந்தையை அம்முதலையின் வாயின்று

மூன்றாண்டு வளர்ச்சியுடன் அழைத்துக் கொடுத்தது.

5. வெள்ளை யானையில் ஏறி திருக்கைலாசத்திற்கு எழுந்தருளியது.

திருவெண்ணெய்நல்லூரில் இறைவன் தடுத்தாட்கொண்டபோது அவர் பாடிய

பித்தா பிறை சூடி

என்று தொடங்கும் பாடல்களே

இங்குப்

பாடமாக

வைக்கப்பட்டுள்ளன.

1. பித்தா! பிறைசூடீ! பெருமானே! அருளாளா!

எத்தால் மறவாதே நினைக்கின்றேன்? மனத்து உன்னை

வைத்தாய்; பெண்ணைத் தென்பால்
வெண்ணெய் நல்லூர் அருள்-துறையுள்

அத்தா! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன்
எனல் ஆமே? .

2. நாயேன் பல நாளும் நினைப்பு இன்றி, மனத்து உன்னை,

பேய் ஆய்த் திரிந்து எய்த்தேன்; பெறல் ஆகா அருள் பெற்றேன்;

வேய் ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்-துறையுள்

ஆயா! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன்
எனல் ஆமே? .

3. மன்னே! மறவாதே நினைக்கின்றேன்,
மனத்து உன்னை;

பொன்னே, மணிதானே, வயிர(ம்)மே, பொருது
உந்தி

மின் ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருள்-துறையுள்

அன்னே! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன்
எனல் ஆமே? .

4. முடியேன்; இனிப் பிறவேன்; பெறின்
மூவேன்; பெற்றம் ஊர்தீ!

கொடியேன் பல பொய்யே உரைப்பேனைக்
குறிக்கொள், நீ!

செடி ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருள்-துறையுள்

அடிகேள்! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன்
எனல் ஆமே?.

5. பாதம் பணிவார்கள் பெறும் பண்டம்(ம்) அது பணியாய்!

ஆதன் பொருள் ஆனேன்; அறிவு இல்லேன்; அருளாளா!

தாது ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்-துறையுள்

ஆதி! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன் எனல் ஆமே?.

=

6. தண் ஆர் மதிசூடீ! தழல் போலும் திருமேனி!

எண்ணார் புரம் மூன்றும் எரியுண்ண(ந்) நகை செய்தாய்!

மண் ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்-துறையுள்

அண்ணா! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? .

7. ஊன் ஆய், உயிர் ஆனாய்; உடல் ஆனாய்; உலகு ஆனாய்;

வான் ஆய், நிலன் ஆனாய்; கடல் ஆனாய்; மலை ஆனாய்;

தேன் ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்-துறையுள்

ஆனாய்! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? .

8. ஏற்றார் புரம் மூன்றும் எரியுண்ணச் சிலை தொட்டாய்!

தேற்றாதன சொல்லித் திரிவேனோ? செக்கர் வான் நீர்

ஏற்றாய்! பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்-துறையுள்

ஆற்றாய்! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? .

9. மழுவாள் வலன் ஏந்தீ! மறை ஓதீ! மங்கை பங்கா!

தொழுவார் அவர் துயர் ஆயின தீர்த்தல் உன தொழிலே;

செழு வார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்-துறையுள்

அழகா! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன் எனல் ஆமே?.

10.கார் ஊர் புனல் எய்தி, கரை கல்லித் திரைக் கையால்

பார் ஊர் புகழ் எய்தி, திகழ் பல் மா மணி உந்தி,

சீர் ஊர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்-துறையுள்

ஆரூரன் எம்பெருமாற்கு ஆள் அல்லேன் எனல் ஆமே?.

அருஞ்சொற்பொருள்

1. பித்தன் - பேரருள் உடையவன், அத்தா - தலைவன்

2. வேய் - மூங்கில், நாயேன் - நாய் போன்ற கீழ்மையானவன்

3. உந்தி - வயிறு, மின் ஆர் - ஒளி மிகுந்த

4. மூ - மூப்பு

5. தாது - மகரந்தம்

6. தண்ணார் - குளிர்ச்சி பொருந்திய, மதி - திங்கள், தழல் - நெருப்பு

7. ஊன் - உடல்

8. செக்கர் - சிவந்த

9. மழு - மழுப்படை, மறை - வேதம்

10.கார் - மேகம், புனல் -நீர்

## 5.மாணிக்கவாசகர் - திருப்பள்ளியெழுச்சி

மாணிக்கவாசகர் சைவ

சமயக்

குரவர்கள்

நால்வரில்

ஒருவர்.

முன்னைய

மூவரும் தேவாரம் பாடியிருக்க

இவர்

திருவாசகமும்,

திருக்கோவையாரும்

பாடியுள்ளார். இவர் 9 ஆம் நூற்றாண்டில் வரகுண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவர்.

திருவாதவூரார் பாண்டிய நாட்டில் சம்புபாத சரிதருக்கும், சிவஞானவதிக்கும் மகனாகப்

பிறந்தவர். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து, மன்னன் அரிமர்த்தன பாண்டியனுக்கு

அமைச்சராகப் பதவி அமர்ந்தார். தன் புலமையால் “தென்னவன் பிரம ராயன்” எனும்

பட்டத்தையும் பெற்றார். உயர்ந்தஉயர்ந்த பதவி, செல்வம்,செல்வாக்கு எல்லாம் இருந்தபோதும் இவை வாழ்வின் இறுதி நோக்கமல்ல என்பதை

உணர்ந்த திருவாதவூரார் சைவசித்தாந்தத்தை ஆராய்ந்து சிவ வழிபாடு மேற்கொண்டு ஒழுகி

வரலானார். ஞான நெறியைப் பின்பற்றிய இவர் 32 ஆண்டுகளே வாழ்ந்து ஆனிமகத்தில் சிதம்பரத்தில் சிவனடி சேர்ந்தார். இவருக்கு அருள்வாசகர், மாணிக்கவாசகர்,

1. திருவாதவூரடிகள், தென்னவன் பிரமராயன் என்ற பெயர்களும் உண்டு அற்புதங்கள்ே நரியைக் குதிரையாக்கிக் கொண்டு வரும்படியும் மண்சுமந்து

அடிபடும் படியும் நடந்து கொண்டது.

2. பிறவி தொட்டு ஊமையாயிருந்த பெண்ணைப் பேசவைத்தமை

3. தம்முடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்த ருளி வந்து எழுதும் பேறு பெற்றுக்கொண்டது. 4. எல்லாரும் காணத்தக்கதாக திருச்சபையினுள்ளே புகுந்து சிவத்தோடு கலந்தது. திருப்பள்ளியெழுச்சி மாணிக்கவாசக

சுவாமிகள் திருப்பெருந்துறையில் (இன்றைய ஆவுடையார் கோவில்)
எழுந்தருளியிருந்தபோது, விடியற்காலத்தில் இறைவனைத் துயில் எழுப்புவதாகத் திருப்பள்ளியெழுச்சி என்னும் இதனை அருளிச் செய்தார். திருப்பள்ளியெழுச்சி என்பது, 'சுப்ரபாதம்' என வடமொழியில் வழங்கும். வைகறையில்-அதிகாலைப் பொழுதில்-இருள்நீங்க ஒளி எழுவதுபோல, ஆன்மாக்களுடைய ஞானவொளி வெளிப்படுகின்ற முறைமையை இப்பாடல்கள் குறிக்கின்றன. மேலும், இது நம்முள் உறங்கும் இறைவனைத் துயில் எழுப்புவதுமாம்.

1. போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறை உறை சிவபெருமானே

ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.

2. அருணன் இந்திரன் திசை அணுகினன்
இருள்போய் அகன்றது உதயம்நின் மலர்த்திரு
முகத்தின் கருணையின் சூரியன் எழ எழ
நயனக் கடிமலர் மலரமற்று அண்ணலங்
கண்ணாம் திரள்நிரை அறுபதம் முரல்வன
இவையோர் திருப்பெருந் துறையுறை
சிவபெருமானே அருள் நிதி தர வரும் ஆனந்த
மலையே அலைகடலே பள்ளி
யெழுந்தருளாயே.

3. கூவின பூங்குயில் கூவின கோழி

குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்

ஓவின தாரகை ஒளியொளி உதயத்து

ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்

தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்

திருப்பெருந் துறையுறை சிவபெருமானே

யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்

எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.

4. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர்
ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.

5. பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும் அரியாய் எங்கள் முன்வந்து

ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.

6. பப்பற வீட்டிருந்து உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின்றார் அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கண் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.

7. அது பழச்சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங் கெழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள்ளாய்திருப் பெருந்துறை மன்னா

எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெருமான்பள்ளி யெழுந்தருளாயே.

8. முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின்னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமுதே பள்ளி யெழுந்தருளாயே.

9. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே.

10.புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம் அவ மே இந்தப்பூமி

சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தருளாயே.

**அருஞ்சொற்பொருள்**

க.மசெரி கதைமான் பப்பா கழல் - திருவடி,
சென்னி - தனை, ஏதங்கள் - குற்றங்கள், பப்பற
- பற்றற்று,
பந்தனை - பிறவ

**அலகு - 2**

**1. ஆண்டாள்**



## நாச்சியார் திருமொழி

ஆண்டாள் தமிழகத்தில் 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களுள் ஒருவர். வைணவம் போற்றும் 12 ஆழ்வார்களில் இவர் ஒருவரே பெண்ணாவார். மதுரைக்கு அண்மையிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர்

என்னும் ஊரில்

வசித்துவந்த விஷ்ணுசித்தர் (பெரியாழ்வார்) என்னும் அந்தணர்

ஒருவரால் ஒரு குழந்தையாக துளசிச் செடியின் கீழ் கிடந்தபோது, ஆண்டாள் கண்டெடுக்கப்பட்டாள்.

இவ்வந்தணர் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் சமேத அரங்கநாதர்

கோவிலுக்கு மலர்கள் கொய்து கொடுப்பதைத் தமது கடமையாகக் கொண்டவர். தனக்கெனக் குடும்பம் எதுவும் இல்லாதிருந்த நிலையிலும், கண்டெடுத்த குழந்தையை

தனக்கு இறைவனால் வழங்கப்பட்ட கொடை எனக் கருதி வளர்த்து வரலானார். ஆயர் குல பெருமை அறிந்த பெரியாழ்வார் அக்குழந்தைக்கு இட்ட பெயர் கோதை என்பதாகும். இளம் வயதிலேயே, தனக்குத் தெரிந்த சமயம் சார்ந்த கருத்துக்கள் மற்றும்

தமிழ்மொழி போன்ற அனைத்தையுமே விஷ்ணுசித்தர் கோதைக்குச் சொல்லிக் கொடுத்தார். இதனால் கோதை இளம் வயதிலேயே கண்ணன் மீது மிகுந்த பக்தியுணர்வு கொண்டவராயும் தமிழில் நல்ல திறமை கொண்டவராகவும் இருந்தார். சிறு வயதிலேயே கண்ணன் மீதிருந்த அளவற்ற அன்பு காரணமாக அவனையே மணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தையும் வளர்த்துக்கொண்டார். தன்னைக் கண்ணனின் மணப்பெண்ணாக நினைத்துப் பாவனை செய்துவந்தார். கோயிலில் இறைவனுக்கு அணிவிப்பதற்காக விஷ்ணுசித்தர் தொடுத்து வைத்திருக்கும் மாலைகளை ஒவ்வொரு நாளும் அவருக்குத் தெரியாமல் தான் அணிந்து கண்ணனுக்கு ஏற்றவளாக தானிருக்கிறோமா என்று கண்ணாடியில் பார்த்து

மகிழ்ந்து பின்னர் திரும்பவும் கொண்டுபோய் வைத்துவந்தார். இதனால் கோதை

சூடிய மாலைகளே இறைவனுக்கும் சூடப்பட்டன. ஒருநாள் இதனை அறிந்து கொண்ட மாலையை விஷ்ணுசித்தர் கோதையைக் கடிந்துகொண்டார். அவள் சூடிய ஒதுக்கிவிட்டுப் புதிய மாலை தொடுத்து இறைவனுக்கு அணிவித்தார். அன்றிரவு இறைவன் அவரது கனவில் தோன்றி கோதை அணிந்த மாலைகளே தனக்குப் உகப்பானவை எனவும் அவற்றையே தனக்குச் சூடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இதனாலேயே ‘சூடிக்கொடுத்த சுடர்க்கொடி” என்றும் "இறைவனையே ஆண்டவள்" என்ற பொருளில் ஆண்டாள் என்றும் போற்றப்படுகிறார். கோதை மண வயதடைந்த பின்னர் அவளுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட திருமண ஏற்பாடுகளை மறுத்து, திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) கோயிலில் உறையும் இறைவனையே மணப்பதென்று பிடிவாதமாக

இருந்தார். என்ன செய்வதென்று அறியாது கவலையுடனிருந்த விஷ்ணுசித்தருடைய கனவில் தோன்றிய இறைவன், கோதையை மணப்பெண்ணாக அலங்கரித்து திருவரங்கம் கோயிலுக்கு அழைத்துவருமாறு பணித்தார். குறித்த நாளன்று கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட கோதை, கோயில் கருவறைக்குள் சென்று இறைவனுடன் கலந்துவிட்டாள் என்பது ஆண்டாள் வரலாறு. இயற்றிய நூல்கள்

ஆண்டாள் தனது 15ஆம் வயதில் இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு முன் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு நூல்களை இயற்றியுள்ளார். இவ்விரு நூல்களும் அதன் இலக்கிய செழுமை, தத்துவம், பக்தி ஆகியவற்றிக்காக அனைவராலும் போற்றப்படுகின்றது. இவரது முதல் படைப்பான திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டுள்ளது. இத் திருப்பாவை ஆண்டாள் தன்னை ஆயர்பாடியில் வாழும் கோபிகையாக நினைத்துக் கொண்டு பாடப்பெற்ற பாட்டுகளின்

தொகுப்பாகும். . இவரது இரண்டாவது படைப்பான நாச்சியார் திருமொழி 143 பாடல்களைக் கொண்டுள்ளது. இறைவனை நினைத்துருகிப்பாடும் காதல்ரசம் மிகு பாடல்களின் தொகுப்பாக காணப்படுகின்றது. கண்ணனை மணமுடிப்பதாக ஆண்டாள் பாடியுள்ள நாச்சியார் திருமொழியில் உள்ள 'வாரணமாயிரம்' பாடல் தொகுப்பு புகழ் பெற்றது. இந் நூலில் பத்துப் பாடல்களைக் கொண்ட 14 தலைப்புக்கள் அமைந்துள்ளன. 1. முதற் பத்துப் பாடல்கள், “கண்ணனை இணைக்கு” எனக் காமனைத் தொழும் பாங்கில் அமைந்தவை. 2. இரண்டாம் பத்து, சிறுமியர் மயனைத் தம் "சிற்றில் சிதையேல்” எனக் கேட்கும் வகையில் அமைந்தவை. 3. மூன்றாம் பத்து கன்னியரோடு கண்ணன் விளையாடுவதைக் கூறும் பாங்கில் அமைந்துள்ளது. 4. நான்காம் பத்துப் பாடல்கள் கூடல் குறிப்புப் பற்றியவை. 5. ஐந்தாம் பத்து குயிற்பத்து என்னும் குயிலை விளித்துப் பாடுகின்றன. 6. ஆறாம்பத்து மாயவன் தன்னை

மணஞ்செய்யக் கண்ட கனவைத் த7. ஏழாம் பத்து, பாஞ்சசன்னியத்தைப் பதுமநாபனோடும் சுற்றமாக்கல் என்னும்

தலைப்பில் அமைந்தவை.

8. எட்டாம் பத்து மேகவிடு தூதாக அமைந்துள்ளது.

எம்பெருமானை

வழிபடும்

9. ஒன்பதாம் பத்தில் திருமாலிருஞ்சோலை

பாங்கிலான பாடல்கள் அமைந்துள்ளன.

10. பத்தாம் பத்து மாற்செய் வகையோடு மாற்றம் இயம்பல் என்னும் தலைப்பில்

அமைந்த பாடல்களைக் கொண்டுள்ளது.

11. பதினோராம்

பத்து

திருவரங்கத்துச்

செல்வனைக்

காமுறுவதாக

அமைந்துள்ளது.

12. பன்னிரண்டாம் பத்து சீதரனிருந்துழிச் செலுத்துவீர் எனை எனக் கோதை

தமர்க்குக் கூறிய துணிபு எனும் தலைப்பில் அமைந்துள்ளது.

13. பதின்மூன்றாம் பத்து அவலம் தணி என இறைவனைக் கோருவதாக

அமைந்துள்ளது.

14.பதினான்காம் பத்து பிருந்தாவனத்தே பரந்தாமனைக் கண்டது

பற்றிக்

கூறுகிறது.

இவற்றுள் ஏழாம் பத்தில், கற்பூரம் நாறுமோ என்று தொடங்கும் பாடலே இங்கு

நமக்குப் பாடமாக அமைக்கப்பட்டுள்ளது.

1. கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ,

திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்தி ருக்கும்மோ,

மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்,

விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.

2. கடலில் பிறந்து கருதாது, பஞ்சசனன்

உடலில் வளர்ந்துபோ யூழியான் கைத்தலத்

திடரில் குடியேறித் தீய வசுரர்,

நடலைப் படமுழங்கும் தோற்றத்தாய் நற்சங்கே.

3. தடவரை யின்மீதே சரற்கால சந்திரன்,

இடையுவா வில்வந்தெ ழுந்தாலே போல், நீயும்

வடமதுரை யார்மன்னன் வாசுதே வன்கையில்,

குடியேறி வீற்றிருந்தாய் கோலப்பெருஞ்சங்கே.

4. சந்திர மண்டலம்போல் தாமோத ரன்கையில்,

அந்தர மொன்றின்றி யேறி யவஞ்செவியில்,

மந்திரம் கொள்வாயே போலும் வலம்புரியே,

இந்திரனு முன்னோடு செல்வத்துக் கேலானே.

5. உன்னோ டுடனே யொருகடலில் வாழ்வாரை,

இன்னா ரினையாரென் றெண்ணுவா ரில்லைகாண்,

மன்னாகி நின்ற மதுசூதன் வாயமுதம்,

பன்னாளு முண்கின்றாய் பாஞ்சசன் னியமே.

6. போய்த்தீர்த்த மாடாதே நின்ற புணர்மருதம்,

சாய்த்தீர்த்தான் கைத்தலத்தே யேறிக் குடிகொண்டு

சேய்த்தீர்த்த மாய்நின்ற செங்கண்மால் தன்னுடைய

வாய்த் தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் வலம்புரியே.

7. செங்கமல நாண்மலர்மேல் தேனுகரு மன்னம்போல்

செங்கட் கருமேனி வாசுதே வனுடய,

அங்கைத் தலமேறி அன்ன வசஞ்செய்யும்,

சங்கரையா உஞ்செல்வம் சாலவ ழகியதே.

8. உண்பது சொல்லி லுலகளந்தான் வாயமுதம்,

கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே,

பெண்படை யாருன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்,

பண்பல செய்கின்றாய் பாஞ்சசன்னியமே.

9. பதினாறா மாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப,

மதுவாயில் கொண்டாற்போல் மாதவன்றன் வாயமுதம்,

பொதுவாக வுண்பதனைப் புக்குநீ யுண்டக்கால்,

சிதையாரோ வுன்னோடு செல்வப்பெருஞ்சங்கே.

சிதையாரோ வுன்னோடு செல்வப்பெ ருஞ்சங்கே.

10.பாஞ்சசன்னியத்தைப் பற்பநா பனோடும்,

வாய்ந்தபெருஞ்சுற்ற மாக்கிய வண்புதுவை,

ஏய்ந்தபுகழ்ப் பட்டர்பிரான் கோதைதமி
ழீரைந்தும்,

ஆய்ந்தேத்த வல்லா ரவரு மணுக்கரே.

முதலாழ்வார் மூவர்

**பொய்கையாழ்வார்**

பொய்கையாழ்வார் வைணவ நெறியைப்
பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கிய

பன்னிரு ஆழ்வார்களுள் முதலாழ்வார் ஆவார்.
காஞ்சிபுரத்தில் ஐப்பசி மாதம்

திருவோணம் நட்சத்திரத்தில் திருவெஃகா எனும்
பதியிலுள்ள சொன்னவண்ணம்

செய்த பெருமாள் கோயிலுள்ள பொய்கையில்
பிறந்தவர். திருமாலின் ஐம்படைகளின்

ஒன்றாக விளங்கும் பாஞ்ச சன்யம் என்ற
சங்கின் அம்சமாக பிறந்தவரே பொய்கை

ஆழ்வார் என்பது ஆன்றோரின் அருள்வாக்கு - இவரால் அந்தாதியாகப் பாடப்பட்ட

நூறு

பாடல்

முதல் திருவந்தா எனப்படுகின்ற

முதன்முதலில் விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் பாடியவர். இப்பாசுரம் - வையம்

தகளியா வார்கடலே நெய்யாக" என்னும் வரியை முதலடியாக கொண்டு துவங்குகிறது.

தொகுப்பில் இயற்பா தொகுப்பில்

இந்நூல் நாலாயிர திவ்ய பிரபந்தம்

இடம்பெற்றுள்ளது.

**பூதத்தாழ்வார்**

பொய்கை ஆழ்வார் தோன்றிய மறுநாள், ‘அலைகள் தாலாட்டும் மாமல்லபுரம்’

என்றும், ‘கடல் மல்லை’ என்றும் இலக்கியங்களில் போற்றப்படும் மகாபலிபுரத்தில்

பள்ளிகொண்ட அரங்கநாதர் திருக்கோவில் நந்தவனத்தில் குருக்கத்தி மலரின் மீது

பிறந்தவர் பூதத்தாழ்வார். திருமாலின் ஐந்து ஆயுதங்களில் ஒன்றான கவுமோதகி

என்னும் கதை ஆயுதத்தின் அம்சமாக இறை ஒளியுடன் பிறந்தவர்.

எம்பெருமானுடைய உண்மையான நிலைமையை உணர்ந்து பரஞானம் அடைந்தவர்

என்பதனால், ‘பூதத்தார்’ எனப் பெயர் வந்ததாக்க் கூவர்.

**பேயாழ்வார்**

பூதத்தாரின் அவதார தினத்துக்கு அடுத்த நாள், பரந்தாமனின் நாந்தகம் என்ற

வாளின் அம்சமாக, சென்னை மயிலாப்பூர் கேசவப் பெருமாள் கோவில் அருகே உள்ள

ஒரு கிணற்றில் செவ்வல்லி மலரில்தோன்றியவர்பேயாழ்வார். மயிலை அருண்டேல்

தெருவில் உள்ள ஒரு மடத்தையும், அதில் உள்ள பெரியகிணறு ஒன்றையும்

பேயாழ்வாரின்

அவதார

இடமாக

காட்டுகிறார்கள்.

இவர் இளமையில் நன்று கல்வி கற்று, உலக வாழ்வில் பற்றற்று இடையறாது

எம்பெருமாளைச் சேவித்து வந்தார். அதிக அன்பு கொண்டு வாழ்ந்ததனால்

உலகத்தாரால் பேயன் என்று
அழைக்கப்பட்டார். அதிக பக்தியில்
ஆடியதால் 'பேய்

ஆழ்வார்' என்றனர்.

மூவரின்சந்திப்பு

திருமாலின் திருவுள்ளப்

படி

மூன்று நாட்களில், மூன்று தலங்களில்

முதலாழ்வார்கள் மூவரும் தோன்றினர்.
அவர்களை ஓரிடத்தில் இணைக்கவும்,

அவர்களின் வாயிலாக தேன் சொட்டும் தமிழ்
பாசுரங்களைச் செவிமடுக்கவும்

இறைவன்

முடிவு

செய்தார்.

திருவிக்ரம பெருமாள் எழுந்தருளி இருக்கும்
திருக்கோவலூர் என்ற தலத்திற்கு செல்ல

வேண்டும்

என்ற

எண்ணத்தை,

மூவருக்கும்

பெருமாள்

ஏற்படுத்தினார்.

ஒரு நாள், பொய்கையார் திருக்கோவலூர் சென்றார். இரவு நேரமாகிவிட்டது. ஒரு

வைணவப் பெரியாரின் இல்லம் சென்று இடைக்கழியில் படுத்துக்கொண்டார். சற்று

நேரத்தில், பூதத்தாரும் அங்கே வந்து சேர்ந்தார். ஒருவர் படுத்திருப்பதை அறிந்ததும்

'எனக்கு இடமுண்டோ?' என்று வினவினார். 'இவ்விடத்தில் ஒருவர் படுக்கலாம்,

இருவர் இருக்கலாம் வாருங்கள்' என்று எழுந்து அமர்ந்துகொண்டார். சிறிது நேரம்

கழித்து பேயார் அங்கே வந்து, 'எனக்கு இடமுண்டோ?' என்று கேட்க 'இருவர்

இருக்கலாம் மூவர் நிற்கலாம், நீரும் வாரும்' என்று சொல்ல மூவரும் நின்று கொண்டு

ஒருவரை

ஒருவர்

அறிமுகம்

செய்து

உரையாடிக்

கொண்டிருந்தனர்.

அப்போது, கருமேக நிறத்துப் பெருமாள், பெருமழையையும், காரிருளையும்

தோற்றுவித்து, தாமும் அவர்களுடே நின்று நெருக்கடியை உண்டாக்கினார்.

'வந்திருப்பது யார்?' என்று ஆழ்வார்கள் மூவரும் புறக்கண்ணால் நோக்கியபோது

அவர்களின் கண்ணுக்குப் பெருமாள் அகப்படவில்லை. பின்னர் தங்களின் தவ நிலையைக் கொண்டு அகக்கண்ணால் கண்டனர். அப்போது நாராயணரே வந்து தங்களோடு நிற்பதைக் கண்டு உடல் சிலிர்த்துப் போனார்கள். உள்ளம் உருகினார்கள். அப்போது திருமால் நாச்சியாரோடு, கருடவாகனத்தில் காட்சி கொடுத்தார். முதன்முதலாக இம்மூவரும் பாடிய பாடல்கள் நமக்குப் பாட வைக்கப்பட்டுள்ளன.

## 2.பொய்கையாழ்வார்




‘அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக

இன்புறு சிந்தை இருதிரியா - நன்புருகி

ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணர்க்கு

ஞானத் தமிழ்புரிந்த நாள்’

## 3.பேயாழ்வார்




‘திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழும்

அருக்கன் அணிநிறமும் கண்டேன் -
செருக்கிளரும்

பொன்னாழி கண்டேன் புரிச்சங்கம்
கைக்கண்டேன்

எனாழி வண்ணன்பால் இன்று

## 4.பூதத்தாழ்வார்




அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக


இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி

ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு

ஞானத் தமிழ் புரிந்த நான்

**5.நம்மாழ்வார்**

நம்மாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றி



பக்தியில் சிறந்து விளங்கிய

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். இவர் தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்

திருநகரியில் காரியார் மற்றும் உடைய நங்கைக்குத் திரு மகனாராகப் பிறந்தவர். இவர்

பிறந்த உடன் அழுதல், பால் உண்ணுதல் முதலியனவற்றைச் செய்யாமல் உலக

இயற்கைக்கு மாறாக இருந்ததால் அவரை "மாறன்" என்றே அழைத்தனர். மாயையை உருவாக்கும் "சட" எனும் நாடியினாலே குழந்தைகள் பிறந்தவுடன் அழுகிறது. ஆனால் விஷ்வக்சேனரின் அம்சமாகப் பிறந்த இவர் சட நாடியை வென்றதால் "சடகோபன்" என்றும் அழைக்கப்பட்டார். யானையை அடக்கும் அங்குசம் போல, பரன் ஆகிய திருமாலை தன் அன்பினால் கட்டியமையால் "பராங்குசன்" என்றும், தலைவியாக தன்னை வரித்துக் கொண்டு பாடும்போது "பராங்குசநாயகி" என்றும் அழைக்கப்படுகிறார். நான்கு வேதங்களைத் தீந்தமிழில் பாடியதால் "வேதம் செய்த மாறன்" என்றே புகழப்படுகிறார். பதினாறு ஆண்டுகள் திருக்குருகூர் நம்பி கோவிலின் புளிய மரத்தின் அடிய

எவ்வித சலனமும் இல்லாமல் தவம் செய்து வந்தார். வடதிசை யாத்திரை மேற்கொண்டிருந்த மதுரகவி என்பவர் அயோத்தியில் இருந்தபோது தெற்குத்

திசையில் ஒரு ஒளி தெரிவதைக் கண்டு அதனை அடைய தென்திசை நோக்கிப்

பயணித்தார். மாறனிடமிருந்தே அவ்வொளி வருவதை அறிந்து அவரை சிறு கல்

கொண்டு எறிந்து விழிக்க வைத்தார். சடகோபனின் ஞானத்தாலும், பக்தியாலும்

கவரப்பெற்று அவருக்கே அடிமை செய்தார் என்பது வரலாறு.

நம்மாழ்வார் இயற்றிய பாசுர நூல்கள் நான்கு. அவை,

1. திருவிருத்தம் - 100 பாசுரங்கள்
2. திருவாசிரியம் - 8 பாசுரங்கள்
3. பெரிய திருவந்தாதி - 87 பாசுரங்கள்

## 4. திருவாய்மொழி - 1102 பாசுரங்கள்

நம்மாழ்வாரின் வேறு பெயர்கள்

சடகோபன், மாறன், காரிமாறன், பராங்குசன், வேதம் தமிழ் செய்த மாறன்,

வகுளாபரணன்,

குருகைப்பிரான், குருகூர் நம்பி, திருவாய்மொழி பெருமாள்,

பெருநல்துறைவன், குமரி துறைவன், பவரோக பண்டிதன், ஞதனதேசிகன், ஞான

பிரான், ஞானத் தமிழ்க் கடல்.

இவர் இயற்றிய திருவாய்மொழியில் நான்காம் திருமொழியிலிருந்து 5 பாடல்கள்

பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

நான்காந் திருமொழி

1. அஞ்சிறைய மடநாராய். அளியத்தாய் நீயும்நின்

அஞ்சிறைய சேவலுமாய் ஆவாவென் றெனக்கருளி

வெஞ்சிறைப்புள் ளுயர்த்தாற்கென் விடுதூதாய்ச் சென்றக்கால்

வன்சிறையில் அவன்வைக்கில் வைப்புண்டா லென்செய்யுமோ?

2. என்செய்ய தாமரைக்கண் பெருமானார்க் கென்தூதாய் என்செய்யும் உரைத்தக்கால் இனக்குயில்காள். நீரலிரே? முன்செய்த முழுவினையால் திருவடிக்கீழ்க் குற்றேவல் முன்செய்ய முயலாதேன் அகல்வதுவோ விதியினமே? 3. விதியினால் பெடைமணக்கும் மென்னடைய அன்னங்காள். மதியினால் குறள்மாணாய் உலகிரந்த கள்வற்கு மதியிலேன் வல்வி னையே மாளாதோ வென்று , ஒருத்தி மதியெல்லாம் முள்கலங்கி மயங்குமால் என்னீரே. 4. என்நீர்மை கண்டிரங்கி யிதுதகா தென்னாத என்நீல முகில்வண்ணற் கென்சொலியான் சொல்லுகேனோ நன்னீர்மை யினியவர் கண் தங்காதென் றொருவாய்ச்சொல் நன்னீல மகன்றில்காள்.

நல்குதிரோ நல்கீரோ? 5. நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே, நல்கத் தானாகாதொ? நாரணனைக் கண்டக்கால் மல்குநீர்ப் புனற்படப்பை இரைதேர்வண் சிறுகுருகே. மல்குநீர்க் கண்ணேற்கோர் வாசகங்கொண் டருளாயே.

## அலகு - 3

## 1.தாயுமானவர்



தாயுமானவர் இவர் தமிழ்நாட்டில், நாகப்பட்டினம்மாவட்டத்தில், திருமறைக்காடு என்று அழைக்கப்படும் வேதாரண்யத்தில் பிறந்தார். இவர் தந்தையார் கேடிலியப்பர்,

தாயார் கெஜவல்லி அம்மையார் ஆவார். இவர் வடமொழி, தமிழ் மொழி ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்றவர். தாயுமானவர் திருச்சிராப்பள்ளியை ஆட்சிபுரிந்த விசயரகுநாத சொக்கலிங்கரிடம் அரச கணக்கராகப் பணிபுரிந்தவர். பின்னர் அப்பதவியைத் துறந்து திருமூலர் மரபில் வந்த, திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த மௌன குரு என்பவரிடம் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டார். தவநெறியில் சிறந்து விளங்கி தாயுமானவர், பல்வேறு திருத்தலங்களுக்கும் சென்று இறைவனைப்பாடி வழிபட இறுதியில் இராமநாதபுரம் மாவட்டம் இலட்சுமிபுரம் என்னும் ஊரில் சம் அடைந்தார்

3. தம் எளிய பாடல்கள் மூலம் தமிழ்ச்சமயக் கவிதைக்கு ஒரு தூணாக இருந்தவர்
4. தாயுமானவர். வள்ளலாரும், பாரதியாரும் எளிய கவிதைகள் பாடுவதற்கு இவரே
5. முன்னோடியாகத் திகழ்ந்தார்.
6. தாயுமான சுவாமிகள் திருப்பாடல் திரட்டு என்னும்

7. நூலில் 36 தலைப்புகளில் 1452 பாடல்கள் உள்ளன. அவற்றில் 771 பாடல்கள்

8. கண்ணிகளாகவும்,

9. 83

10. பாடல்கள்

11. வெண்பாக்களாகவும்

12. உள்ளன.

13. அவற்றுள்

14. பைங்கிளிக்கண்ணி என்ற தலைப்பில் அமைந்த பாடல்களுள் ஐந்து பாடல்கள்

15. பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

## பைங்கிளிக்கண்ணி

1. அந்தமுடன் ஆதி அளவாமல் என்னறிவில்

சுந்தரவான் சோதி துலங்குமோ பைங்கிளியே.

16. 2. அகமேவும் அண்ணலுக்கென் அல்லலெல்லாஞ் சொல்லிச்

17. சுகமான நீபோய்ச் சுகங்கொடுவா பைங்கிளியே.

18. 3. ஆவிக்குள் ஆவி எனும் அற்புதனார் சிற்சுகந்தான்

19. பாவிக்குங் கிட்டுமோ சொல்லாய்நீ பைங்கிளியே.

20. 4. ஆருமறி யாமல்எனை அந்தரங்க மாகவந்து

சேரும்படி இறைக்குச் செப்பிவா பைங்கிளியே.

21. 5. ஆறான கண்ணீர்க்கென் அங்கபங்க மானதையுங்

கூறாத தென்னோ குதலைமொழிப்

பைங்கிளியே.

## 2.வள்ளலார்




திருவருட் பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம், வாடினேன்” என்று பாடியவர் கடவுள் ஒருவரே என்ற கருத்தை வலியுறுத்தியவர். இவர் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் இருந்து 10 மைல் தொலைவில் உள்ள மருதூரில் புரட்டாசி 19 (05.10.1823)இல் கருணீகர் குலத்தில் பிறந்தவர். பெற்றோர் இராமையாபிள்ளை, சின்னம்மையார். இராமலிங்க அடிகள் 23-

5-1867 அன்று வடலூர் மக்களிடம் இருந்து 80 காணி நிலம் பெற்று தருமசாலையை

தொடங்கினார். இந்த தருமசாலைக்கு வந்தவர்களுக்கு 3 வேளையும் உணவு

வழங்கப்பட்டது. மக்களின் மிகுந்த துயரங்களுள் ஒன்றான பசியைப் போக்கிட

வள்ளலார் வழி வகுத்தார். இன்றளவும் வள்ளலார் பெயரால் லட்சக்கணக்கான

மக்களுக்குப் பசியாற்றப்படுகிறது. வடலூரில் தலைமை

இடம்

இருந்தாலும்,

உலகமெங்கும் அவரது கொள்கையைப் பின்பற்றுகின்றவர்கள் பசியாற்றுகிறார்கள்.

1. அருளாசிரியர்
2. இதழாசிரியர்
3. இறையன்பர்

4. உரையாசிரியர்

5. சமூக சீர்திருத்தவாதி

6. சித்தமருத்துவர்

7. சிறந்த சொற்பொழிவாளர்

8. ஞானாசிரியர்

9. தீர்க்கதரிசி

10. நூலாசிரியர்

11. பசிப் பிணி போக்கிய அருளாளர்

12. பதிப்பாசிரியர்

13. போதகாசிரியர்

14. மொழி ஆய்வாளர் (தமிழ்)

15. பண்பாளர்

எல்லா மதங்களிலும் உள்ள உண்மை ஒன்றே என்பதை குறிக்கும் வண்ணம் இவர்

தோற்றுவித்த மார்கத்திற்கு சர்வ சமய சமரச சுத்த சன்மார்க்கம் என்று பெயரிட்டார்.

உண்மையான ஞானி என்பதால் சாதிய பாகுபாடுகளை சாடினார் அதனால் உயர் சாதி

இந்துக்களின் எதிர்ப்பை சம்பாதித்தார், இருப்பினும் தொடர்ந்து தன்

வபயணப்பட்டார்.

தன் வாழ்வின் பெரும்பகுதியைச் சென்னையில் கழித்த இவர், நவீன சமுதாயங்களின் பிரச்சினைகளை உணர்ந்திருந்தார். அனைத்துச் சமய நல்லிணக்கத்திற்காக சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். அறிவுநெறி விளங்க சிதம்பரம் அருகே உள்ள வடலூரில் சத்திய ஞானசபையை அமைத்தார். இத்தகு உயரிய நோக்கங்களுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்துப் பணியாற்றினார். 1867ஆம் ஆண்டில் மக்களின் பசித்துயர் போக்க சத்திய தரும சாலையையும் நிறுவினார். அவர் வாழ்ந்த காலத்தில் அவருடைய சிந்தனைகள் மிகவும் முற்போக்குடையதாகக் கருதப்பட்டாலும், தற்பொழுது உலகெங்கும்

அவருடைய சிந்தனைகளுக்கு ஒத்த கொள்கைகள் புரிந்துகொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றன. இராமலிங்க அடிகள் கொள்கைகள் 1. இறந்தவர்களை எரிக்கக் கூடாது. சமாதி வைத்தல் வேண்டும் 2. எதிலும் பொது நோக்கம் வேண்டும் 3. எந்த உயிரையும் கொல்லக்கூடாது 4. எல்லா உயிர்களும் நமக்கு உறவுகளே. அவற்றைத் துன்புறுத்தக்கூடாது 5. சிறு தெய்வ வழிபாடு கூடாது. அவற்றின் பெயரால் பலி இடுதலும் கூடாது 6. பசித்தவர்களுக்கு சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கருதாது உணவளித்தல் வேண்டும் 7. புலால் உணவு உண்ணக்கூடாது 8. கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் 9. சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கூடாது 10.மத வெறி கூடாது வள்ளலார் பதிப்பித்தவை 1. சின்மய தீபிகை 2. ஒழிவிலொடுக்கம் 3. தொண்டைமண்டல சதகம் இயற்றிய உரைநடை 1. மனுமுறைகண்ட வாசகம் 2.

ஜீவகாருண்ய ஒழுக்கம் திருவருட்பா இவர் பாடிய ஆறாயிரம் பாடல்களின் திரட்டு, திருவருட்பா அழைக்கப்படுகிறது. இது ஆறு திருமுறைகளாக பகுக்கப்பட்டு உள்ளது. இந்திய இவரது சேவையை கருத்தில் கொண்டு 2007 ஆகஸ்ட் 17ல் அஞ்சல்தலை வெளியிட்டு

சிறப்பித்து.

திருவருட்பாவின் ஆறாம் திருமுறையில் அமைந்துள்ள பிள்ளைச் சிறு விண்ணப்பம்

என்ற பகுதியில் இருந்து ஐந்து பாடல்கள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

**பிள்ளைச் சிறு விண்ணப்பம்**

1. தடித்தார் மகனைத் தந்தைாண்டடித்தால்
   தாயுடன் அணைப்பள்தாய் அடித்தால்

பிடித்தொரு தந்தை அணைப்பன்

இங் கெனக்குப் பேசிய தந்தையும் தாயும்

பொடித்திரு மேனி அம்பலத் தாடும் புனிதநீ ஆதலால் என்னை

அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும் அம்மை அப்பாஇனிஆற்றேன்.

2. பெற்றதம் பிள்ளைக் குணங்களை எல்லாம் பெற்றவர் அறிவரே அல்லால்

மற்றவர் அறியார் என்றனை ஈன்ற வள்ளலே மன்றிலே நடிக்கும்

கொற்றவ ஓர்எண்குணத்தவ நீ தான் குறிக்கொண்டகொடியனேன்குணங்கள்

முற்றும்நன் கறிவாய் அறிந்தும் என்றனைநீ முனிவதென்முனிவுதீர்ந்தருளே.

3. வெம்மதிக் கொடிய மகன் கொடுஞ் செய்கை விரும்பினும் அங்கனம் புரியச்

சம்மதிக் கின்றார் அவன்றனைப் பெற்ற தந்தைதாய் மகன்விருப் பாலே

இம்மதிச்சிறியேன்விழைந்ததொன்றிலைநீ என்றனை விழைவிக்க விழைந்தேன்

செம்மதிக் கருணைத் திருநெறி இதுநின்
திருவுளம் அறியுமே எந்தாய்.

4. பொய்பிழை அனந்தம் புகல்கின்றேன் அதில் ஓர் புல்முனை ஆயினும் பிறர்க்கு

நைபிழை உளதேல் நவின்றிடேன் பிறர்பால்
தண்ணிய கருணையால் பலவே

கைபிழை யானை கருதுகின் றேன்நின்
கழற்பதம் விழைகின்றேன் அல்லால்

செய்பிழை வேறொன் றறிகிலேன் அந்தோ
திருவுளம் அறியுமே எந்தாய்.

5. அப்பணி முடிய என் அப்பனே மன்றில் ஆனந்த நடம்புரி அரசே

இப்புவி தனிலே அறிவுவந் ததுதொட் டிந்தநாள்
வரையும் என் தனக்கே

எப்பணி இட்டாய் அப்பணி அலதென்
இச்சையால் புரிந்ததொன் றிலையே

செப்புவ தென்நான் செய்தவை எல்லாம்
திருவுளம் அறியுமே எந்தாய்.

# 3.அருணகிரிநாதர்



அருணகிரிநாதர், தமிழ் நாட்டில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில்

திருவெங்கட்டார், முத்தம்மை தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர்.. இவர் முருகக்

கடவுள் மீது பாடல்கள் எழுதி புகழ் பெற்ற அருளாளர். தமிழ் மொழி, வடமொழி ஆகிய

மொழிகளிலும் புலமை பெற்றவர்.

இவர் எழுதிய திருப்புகழில் 1307

இசைப்பாடல்கள் உள்ளன. இவற்றுள் 1088க்கும் மேற்பட்ட சந்த வேறுபாடுகள்

உள்ளன என்று கணித்து இருக்கிறார்கள். இவரது பாடல்கள் சிக்கலான சந்த

நயத்திற்கும், தாள அமைப்பிற்கும் பெயர் பெற்றவை. இவர் எழுதிய திருப்புகழில்,

இலக்கியமும் பக்தியும் இணைக்கமாக கலக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மேலும்,

“திருப்புகழ்” இடைக்கால தமிழ் இலக்கியத்தின் முக்கிய படைப்புகளில் ஒன்றாக

உள்ளது. அருணகிரிநாதர், தென்னிந்தியா முழுவதிலும் உள்ள கோயில்களுக்குச்

சென்று 16,000 பாடல்களை இயற்றினார். அவற்றுள் சுமார் 2,000 பாடல்கள் மட்டும்

இன்று வரை பாடப்படுகின்றன. அவரது பாடல்கள் நல்லொழுக்கம் மற்றும் நீதியுள்ள

வாழ்க்கையை வாழ்வதற்கான வழியைக் காட்டுகின்றன. முருக பக்தர்களுக்கு,

அருணகிரிநாதர் எழுதிய “திருப்புகழ்” தேவாரத்திற்கு இணையாகவும், ‘கந்தர் அலங்காரம்”

திருவாசகத்திற்கு இணையாகவும் மற்றும் “கந்தர்

அனுபூதி” திருமந்திரத்திற்கு இணையாகவும் போற்றப்படுகின்றது.

அருணகிரிநாதரின் நூல்கள்

கந்தர் அந்தாதி (102 பாடல்கள்)

.

கந்தர் அலங்காரம் (108 பாடல்கள்)

கந்தரனுபூதி (52 பாடல்கள்)

.

திருப்புகழ் (1307 பாடல்கள்)

.

திருவகுப்பு (25 பாடல்கள்)

.

சேவல் விருத்தம் (11 பாடல்கள்)

.

மயில் விருத்தம் (11 பாடல்கள்)

வேல் விருத்தம் (11 பாடல்கள்)

திருவெழுகூற்றிருக்கை

அவற்றுள் திருப்புகழ் நூலில் விநாயகர் துதி என்ற தலைப்பில் அமைந்த பாடல்

பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

## விநாயகர் துதி




நினது திருவடி சத்திம யநினைவு கருதிடு புத்திகொ டுத்திட

நிறைய அமுதுசெய் முப்பழ மப்பமு ....... நிகழ்பால்தேன்

நெடிய வளைமுறி இக்கொடு லட்டுகம்

நிறவில் அரிசிபருப்பவல் எட்பொரி

நிகரில் இனிகத லிக்கனி வர்க்கமும்

இளநீரும்

மனது மகிழ்வொடு தொட்டக ரத்தொரு

மகர சலநிதி வைத்தது திக்கர

வளரு கரிமுக ஒற்றைம ருப்பனை ...... வலமாக

மருவு மலர்புனை தொத்திர சொற்கொடு

வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு

வனச பரிபுர பொற்பத அர்ச்சனை ......
மறவேனே

தெனன தெனதென தெத்தென னப்பல

சிறிய அறுபத மொய்த்துதி ரப்புனல்

திரளும் உறுசதை பித்தநி ணக்குடல்

செறிமூளை

செரும உதரநி ரப்புசெ ருக்குடல்

நிரைய அரவநி றைத்தக ளத்திடை

திமித திமிதிமி மத்தளி டக்கைகள் ......
செகசேசே

எனவெ துகுதுகு துத்தென ஒத்துகள்

துடிகள் இடிமிக ஒத்துமு ழக்கிட

டிமுட டிமுடிமு டிட்டிமெ னத்தவில் ......
எழுமோசை

இகலி அலகைகள் கைப்பறை கொட்டிட

ரண பயிரவி சுற்றுந டித்திட

எதிரு நிசிசர ரைப்பெலி யிட்டருள்

பெருமாளே.

## அலகு.4

# சித்தர்கள் பாடல்கள்

## 1.திருமூலர்




திருமூலர் சேக்கிழார் சவாமிகளால்

புகழ்ந்து பேசப்பட்ட 63 நாயன்மார்களுள் ஒருவரும், பதினெண் சித்தர்களுள் ஒருவரும் ஆவார். எல்லாம் வல்ல பரம் பொருளாகிய இறைவருளால் பல ஆயிரம் ஆண்டுகள் யோக நிலையில் இருந்து தவம் செய்தவர். இவர் சிறந்த ஞானியாய் விளங்கியவர். திருமூலர்

வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் சுருக்கமாய்க்

கூறுகிறார். இவர் வாழ்ந்த காலம் கி.மு 5000 வருடங்களுக்கு முந்தயது எனினும்

இவரால் அருளப்பட்ட திருமந்திரமாலை பல காலத்திற்கு பின்னரே உலகிற்கு

வழங்கப்பட்டது என்பதால் தற்கால அறிஞர்கள் கி.பி என்றே கூறுகின்றனர்.

திருமந்திரத்தைச் சைவத்திருமுறை பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாய்த்

தொகுத்துள்ளனர். திருமூலர் இயற்றிய இத்திருமந்திரம் ஒன்பது தந்திரங்களில்

(இயல்கள்) மூவாயிரம் பாடல்களை கொண்டது. 'மூலன் உரை செய்த

மூவாயிரந்தமிழ் ஞாலம் அறியவே நந்தியருளது' என்ற திருமூலரின் வாக்கினாலேயே இதனை அறியலாம்.

**வேறு பெயர்கள்:**

திருமந்திர மாலை, மூவாயிரந்தமிழ் என்பன திருமந்திரத்தின் வேறு பெயர்கள் ஆகும்.

**நூல் பெருமை:**

இந் நூல் பண்டைய இந்திய சித்தர்களின் அறிய கண்டுபிடிப்புகளையும்

வாழ்வியல் உண்மைகளையும் விளக்குகிறது. வேதம், ஆகமம் ஆகிய இரண்டிற்கும்

இத்திருமந்திரம் அரிய விளக்கமாய்ப் பொலிந்து விளங்குகின்றது. மேலும் இந்நூல்

சைவ ஆகமம் என்று போற்றப்படும் பெருமையினை உடையது. இறைவனை துதி

செய்வதோடு நில்லாமல் பதி, பசு, பாசம் என்பனவற்றின் இணைப்பையும், உயர்ந்த

முறையில் வாழ்வாங்கு வாழ உதவும் நல்முறைகளை விளக்குகிறது. பண்டைய பாரத

சித்தர்கள் கூறிய மனித வளர்ச்சிக்கு உகந்த யோகம் தியானம், குண்டலினி யோகம்,

மருத்துவம், நல் ஒழுக்கம் போன்றவற்றை விளக்கும் அரிய நூலாகவும் திகழ்கிறது.---

தோத்திரத்திற்குத் திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம் எனச் சான்றோர் கூறுவர்.

மேலும் சிவன் அன்பு வடிவானவன் என்னும் அரிய உண்மையினை கூறும்

திருமூலரின் இத்திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகும். உடலை

வருத்தித்தான் ஞானத்தை அடையவேண்டும் என்ற கருத்தை மறுத்த

அவர், பலவீனமான உடலை வைத்துக்கொண்டு வலிமையான ஞானத்தை அடைய

முடியாது என்பதையும் உறுதிப்படக் கூறியுள்ளார்.

இவர் எழுதிய நூல்களில், திருமந்திரம் தலையாயது எனினும், திருமூலர்

அறுநூற்றொன்று,திருமூலர் வைத்தியம்,

திருமூலர்ஞானம், திருமூலர் வழலைச் சூத்திரம்,திருமூலர் பல திரட்டு, திருமூலர் வாதம் இருபத்தொன்று போன்ற மேலும் பல அரிய நூல்களையும் எழுதியுள்ளர். உடல் சார்ந்த தத்துவக் கோட்பாட்டை நமது ஆன்மீக மரபில் அழுத்தமாகப் பதிய வைத்தவர் திருமூலர்தான்.


அன்புடைமை அதிகாரத்தில் திருமந்திரத்தின் முதல் தந்திரத்தில் இடமபெற்றுள்ள 270, 271, 274, 275, 285 ஆகிய பாடல்கள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

## அன்புடைமை

1. அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார் அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார் அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின் அன்பே சிவமாய்

அமர்ந்திருந் தாரே. 2. பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன் மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப் பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. 3. என்அன் புருக்கி இறைவனை ஏத்துமின் முன்அன் புருக்கி முதல்வனை நாடுமின் பின்அன் புருக்கிப் பெருந்தகை நந்தியும் தன்அன் பெனக்கே தலைநின்ற வாறே. 4. தானொரு காலம் சயம்பு என் றேத்தினும் வானொரு காலம் வழித்துணை யாய்நிற்கும் தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன் தானொரு வண்ணம் என் அன்பில்நின் றானே 5. கண்டேன் கமழ்தரு கொன்றையி னான்அடி கண்டேன் கரியுரி யான்தன் கழலிணை கண்டேன் கமல மலர்உறை வானடி கண்டேன் கழலதென் அன்பினுள் யானே.

## 2.குணங்குடி மஸ்தான் சாகிப்



குணங்குடி மஸ்தான் (கி.பி. 1792 - 1838) தமிழ் நாட்டின் ஓர் இஸ்லாமிய இறைஞானி ஆவார். இவர் வடசென்னையில் பழைய வண்ணாரப்பேட்டைப் பகுதியில் வாழ்ந்துள்ளார். தமிழிலும், அரபியிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர்.இஸ்லாமிய சமயத்தைக் குறித்தும், இறைவனைக் குறித்தும் இவர் இயற்றிய தமிழ்

இலக்கியங்கள் புகழ் பெற்றவை ஆகும். இல்வாழ்க்கையைத் துறந்து துறவியாக வாழ்ந்த இவரைத் தமிழ் சித்த மரபினரில் ஒருவராகவும் மக்கள் போற்றுகிறார்கள்.

குணங்குடி மஸ்தான் இராமநாதபுரம் மாவட்டம், வட்டம், தொண்டிக்கு வடமேற்கில் பத்து மைல் தொலைவில் அமைந்துள்ள குணங்குடி என்னும் சிற்றூரில் 1792 ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர்கள் இவருக்கு வைத்த பெயர் சுல்தான் அப்துல்காதிர் என்பதாகும். இவர் இளம் வயதிலேயே குர் ஆன் உள்ளிட்ட இஸ்லாமிய சமய நூல்களையும் ஐயம் நச் கற்றுத் தேர்ந்தார். இவர் திருமண வயதை அடைந்த போது, இவரது உறவினர்கள், இவருடைய தாய்மாமன் மகளான மைமூன் என்ற

பெண்ணை இவருக்குத் திருமணம் செய்வதற்கு ஆலோசித்தனர். அப்துல்காதிருக்குத்

திருமணம் மற்றும் இல்லறத்தில் நாட்டமில்லை. எனவே பெரியவர்களுக்குத் தன்

நிலையை எடுத்துரைத்த பின்பு தன்னுடைய பதினேழாவது வயதில் தன் தந்தையின்

ஆசியுடன் துறவறத்தை மேற்கொண்டார். உலகப்பற்றை அறவே நீக்கினார். பொது

வாழ்க்கை நெறிக்கு உடன்படாமல் இஸ்லாமிய இறைப் பித்தரானார். நாடு, நகரம்,

மொழி இனம் என அத்தனையும் கடந்து இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்தார்.

ஏழு ஆண்டுகள் இவ்வாறிருந்து, பின்னர் வடநாடு சென்று பலருக்கு ஞானோபதேசம்

செய்தார். வடசென்னையில் இராயபுரத்தில் பாவாலெப்பை என்ற இஸ்லாமியருக்குச்

சொந்தமான லெப்பைக் காடு என்ற பகுதியில் தங்கினார். முட்புதர்களும், சப்பாத்திக்

கள்ளியும் அடர்ந்த குப்பைமேட்டில் தவவாழ்க்கை மேற்கொண்டார். இயற்கையைக் கடந்த (supernatural) சக்திகள் பெற்று சித்தர்களின் வழியில் "சித்துக்கள்" என்னும் அற்புதங்களையும் புரிந்தார்.

இவர் புரிந்த அற்புதச் சித்துக்களை எல்லாம் கண்ணுற்ற பொதுமக்கள் இவரை "மஸ்தான்" என்று அழைத்தனர். பிற்காலத்தில் குணங்குடியைச் சேர்ந்தவர் என்ற பொருளில் "குணங்குடி மஸ்தான்" என்ற பெயரே நிலைத்துவிட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொண்டிப் பகுதியைச் சேர்ந்தவர் ஆதலால் இவரைத் "தொண்டியார்" என்றும் அழைத்தனர். பிற்காலத்தில் இவர் வாழ்ந்த பகுதி "தொண்டியார்பேட்டை" என்று பெயர்பெற்றது.

இப்பகுதியே இன்று வடசென்னையின் புறநகர்ப் பகுதியான தண்டையார்பேட்டை (Tondiarpet) ஆகும்

இவர் பல இசையுடன் கூடிய உணர்ச்சி மிக்க பக்திப் பாடல்களை இயற்றியுள்

இந்தப் பாடல்கள் மதங்களைக் கடந்தவை. கி.பி. 1838 ஆம் ஆண்டு தன்னுள்

நாற்பத்து ஏழாம் வயதில் இறந்தார்.

**குணங்குடி மஸ்தான் படைப்புகள்**

1. அகத்தீசர் சதகம்
2. ஆனந்தக் களிப்பு
3. நந்தீசர் சதகம்
4. நிராமயக்கண்ணி
5. பராபரக்கண்ணி
6. மனோன்மணிக்கண்ணி

குணங்குடி மஸ்தானைப் போற்றி எழுதப்பட்டவை

1. குணங்குடி நாதர் பதிற்றுப் பத்தந்தாதி - ஐயாசாமி

2. நான்மணி மாலை - சரவணப் பெருமாளையர்

இவர் இயற்றிய பராபரக்கண்ணியில் இருந்து பத்துக் கண்ணிகள் பாடமாக

வைக்கப்பட்டுள்ளன.

**பராபரக்கண்ணி**

1. அண்ட புவனமென்று மாடுதிருக் கூத்தினையான்

கண்டு மகிழ்ந்திடுவே காட்டாய் பராபரமே!

2. ஆதியா யாண்டவனா யஃபாதுவாய் நின்றபெருஞ்

சோதியாய் நின்மலமாய்ச சூழ்ந்தாய் பராபரமே!

3. வேத மறைப் பொருளை வேதாந்தத் துட்கருவை

ஓதி யுனையறிந்தாருண்டோ பராபரமே!

4. அண்ட புவனமுட னாகாச மென்றுசும்பிக்

கொண்டமெஞ் ஞானக் கூத்தே பராபரமே!

5. நாவாற் புகழ்கெட்டா நாயகனே நாதாந்தம்
பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே!

6. பேராற் பெரிய பெரும்பொருளே பேதைதனக்
காரா ரிருந்துபல னாமோ பராபரமே!

7. மாறாய நற்கருணை மாவருள்சித் தித்திடவே
பாராயோ வையா பகராய் பராபரமே!

8. ஆனாலும் முன்பாதம் யாசித் திருப்பதற்குத்
தானா யிரங்கியரு டாராய் பராபரமே!

9. நாதாந்த மூல நடுவீட்டுக் குள்ளிருக்கு
மாதவத்தோர்க் கான மருவே பராபரமே!

10. உடலுக் குயிரேயென் னுள்ளமே யுன்பத்த்தைக்
கடலுமலை யுந்திரிந்துங் காணேன் பராபரமே!

## 3.வேதநாயகம் பிள்ளை

மாயூரம் வேதநாயகம் பிள்ளை (அக்டோபர் 11, 1826 - சூலை 21, 1889) ஒரு புகழ்

பெற்ற தமிழ் எழுத்தாளர்.
இவர் 1878இல் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் புதினம் தமிழில் வெளியான முதல் புதினம்.
இவர் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள குளத்தூரில் பிறந்தார்.
இவரின் பெற்றோர், சவரிமுத்துப் பிள்ளை, தாயார் ஆரோக்கிய மரி அம்மையார்.
தொடக்கக் கல்வியைத் தமது தந்தையிடம் கற்ற வேதநாயகம் ஆங்கிலம், தமிழ் மொழிக்கல்வியை திருச்சிராப்பள்ளியை சேர்ந்த

தியாகராச பிள்ளை என்பாரிடம் பயின்றார்.
சிறு வயதிலேயே திருமணங்கள்,
விருந்தினர் வருகை போன்ற நிகழ்வுகளின்
போது நகைச்சுவையான கவிதைகளை
எழுதினார் - தமது 25ஆம் வயதில் 1851ல்
காரைக்காலைச் சேர்ந்த பாப்பம்மாள் என்ற
இவர்
நீதிமன்றங்களில்
மங்கையை திருமணம் செய்தார்.
மொழிபெயர்ப்பாளராகவும்
பதிவாளராகவும்
பணியாற்றிய
பின் 1856இல் தரங்கம்பாடியில் முனிசீ்ப்
வேலையில் அமர்ந்தார். மாயவரம் மாவட்ட
முனிசீப்பாக 13 ஆண்டுகள் பணி
புரிந்தமையால் இவரை மாயவரம்
வேதநாயகம்
பிள்ளை
என்றே

அழைக்கலாயினர். மாயவரத்தின் நகர் மன்ற
தலைவராகவும்
பணியாற்றியுள்ளார். அந்தக் காலகட்டத்தில் 16
புத்தகங்கள் எழுதினார். தமிழின் முதல்
புதினமான
பிரதாப
முதலியார்
சரித்திரத்தையும்
அப்போதே
எழுதினார். வீணை இசைப்பதிலும் வல்லமை
பெற்றிருந்தார்.
அவரது சமகாலத்தோரான தமிழறிஞர்கள்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை, இராமலிங்க
வள்ளலார், திருவாவடுதுறை
மடத்தின் மகாசன்னிதானம் சுப்பிரமணிய
தேசிகர், கோபாலகிருஷ்ண
பாரதியார் ஆகியோருடன்
நட்பு
பாராட்டி
நெருங்கியிருந்தார்.

கி.பி 1805 முதல் கி.பி. 1861 ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழியில் இருந்த சதர்ன் கோர்ட் தீர்ப்புகளை தமிழில் மொழி பெயர்த்து சித்தாந்த சங்கிரகம் என்ற நூலாக 1862ல் வெளிட்டார் மேலும் 1862, 1863 ஆம் ஆண்டுகளின் தீர்ப்புகளையும் அவ்வாறே வெளியிட்டார். இவ்வாறு தீர்ப்புகளை முதன் முதலில் மொழி பெயர்த்த தமிழறிஞர் வேதநாயகம் பிள்ளை ஆவார். வேதநாயகம் பிள்ளை ஆக்கிய நூல்கள் பல. அவற்றுள் சில:

.

1862இல் சித்தாந்த சங்கிரகம் (நூல்) - உயர்நிலை ஆங்கில சட்டங்களை தமிழில் செய்த நூல்

1869இல் பெண்மதி மாலை (நூல்) - பெண்களுக்கு ஏற்ற அற முறைகளைப் பாட்டுக்களாலும் உரைநடையாலும் கூறும் நூல்.

.

1873இல்
மூன்று
நூல்கள் திருவருள் அந்தாதி (நூல்), திருவருள் மாலை
(நூல்), தேவமாதர் அந்தாதி (நூல்) இவை
செய்யுள் நூல்கள். கிறித்துவ மதம்
பற்றியது. மத வரலாறு, மற்றும் கடவுள் பால்
அவருக்கிருந்த அன்பு இவற்றைப்
புலப்படுத்துவது.

1878இல் பிரதாப முதலியார் சரித்திரம் புகழ்
பெற்ற கற்பனைக்கதை, தமிழ்
புதினங்களின் முன்னோடி. இது
ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

.

1878இல் "சர்வ சமய சமரசக் கீர்த்தனை (நூல்)
ஏறத்தாழ 200 இசைப்பாடலகள்.

.

1887இல் சுகுண சுந்தரி (நூல்) புதினம்

1889இல் சத்திய வேத கீர்த்தனை (நூல்)

.

பொம்மைக் கலியாணம் (நூல்),
பெரியநாயகியம்மன் (நூல்) என்னும்
நூல்களும்
மற்றும் பல தனிப்பாடல்களும்
இயற்றியுள்ளார்.
இவர் இயற்றிய பெண்மதி மாலை நூலில்
மாதா பிதா வணக்கம் என்ற தலைப்பில்
உள்ள பாடல்கள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.
மாதா பிதா வணக்கம்

1. மாதா பிதாவை வணங்கு - நாளும்
ஆதாரமாகவே யவர்சொல்லுக்கிணங்கு

2. தந்தை தாய் சாபம் பொல்லாது - அவர்
சிந்தை சொத்தால் மக்கள் செல்வம் கில்லாது

3. **மாதா பிதாவுக்குத் துரோகம்** - செய்யும்
பாதகரைச் சுற்றும் பாவமேநேகம்

4. பெற்றவர் நேசத்தைத் தேடு அவர்
குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கொண்டாடு

5. தாய்தந்தைக் கதவாத பிள்ளை - தன்
தாயுசும் வாழ்வு மடியோடே கொள்ளை

6. கட்டியுனை வளாக்க தாமே முன்பு
பட்டபாடுகள் சொல்லப் பாரதமாமே

7. உளைதாய தந்தைக்குத் தீங்கு செய்யும்

பிள்ளையைத் தன்பிள்ளை யேபழிவாங்கும்

8. கடலைப் போமாதா சகாயம் - அதற்

குடல்செருப்பாத் தைத்துப் போடுதல் ஞாயம்

மதியிது மதியிது பெண்ணே - புண்ணிய

வதியல்ல வோ நல்ல மகராசி கண்ணே.

## அலகு - 5

## 1 முத்தொள்ளாயிரம்

**முத்தொள்ளாயிரம்(மூன்று+தொள்ளாயிரம்)** என்பது தமிழ் இலக்கியத்தில் தொகைநூல் வகையைச் சேர்ந்த நூலாகும். இந்நூலின் பாடல்களைப் பாடிய புலவர்யாரென்பது

தெரியவில்லை.முத்தொள்ளாயிரம்முத்தொள்ளாயிரம் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மீது பாடப்பட்ட பாடல்கள்அடங்கிய நூல். ஒவ்வொரு

மன்னரைப் பற்றியும் தொள்ளாயிரம் பாடல்கள் வீதம்

2,700 பாடல்கள் அடங்கிய தொகுப்பு எனக் கருதப்படுகின்றது. இந்நூல் முழுமையும்

கிடைக்கவில்லை. ஆனாலும், முத்தொள்ளாயிரம் தொகுப்பில் மூவேந்தர்களைப் பற்றியும் ஒவ்வொருவருக்கும் முன்னூறு பாடல்களாக மொத்தம் தொள்ளாயிரம் பாடல்களே இருந்தன என பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் 1943 ஆம் ஆண்டில்வசந்தம் என்ற இதழில் எழுதியுள்ளார்.பல்லாண்டுகளுக்கு

முன்னர் புறத்திரட்டு என்னும் நூலின் ஆசிரியர் அந்நூலில் நூற்றொன்பது பாக்களை

மட்டும் தம் தொகை நூலில் திரட்டி வைத்துள்ளார். அவை கடவுள் வாழ்த்தாக ஒன்றும்,சேரனைப் பற்றி

இருபத்திரண்டும், சோழனைப் பற்றி
இருபத்தொன்பதும்,பாண்டியனைப் பற்றி
ஐம்பத்தாறும் சிதைந்த நிலையில் ஒன்றுமாகக்
காணப்படுகின்றன.இவை அனைத்தும்
வெண்பாக்களாகும். இவையேஇவையே
முத்தொள்ளாயிரம் என்ற நூலாகத்
தொகுக்கப்பட்டுள்ளது. மூவேந்தர்களின் நாடு,
அரண், படைச் சிறப்பு, போர்த்திறம், வீரம், ஈகை
முதலான அரிய செய்திகள்
இந்நூலில் இடம் பெறுகின்றன.மூவேந்தரையும்
வாழ்த்தும் மரபு சிலப்பதிகாரத்தில்
காணப்படுகிறது.இந்த நூல் இந்த மரபினைப்
பின்பற்றியுள்ளது.இந்நூலில் இருந்து
மூவேந்தர்களைப் பற்றி ஒன்பது பாடல்கள்
பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

**பாண்டியன்**

**புகழ்**

1. பார்படும் செம்பொன் பதிபடுப முத்தமிழ்நூல்
நீர்படும் வெண்சங்கும் நித்திலமும் - சாரல்
மலைப்படுப யானை வயமாறன் கூர்வேல்
தலைபடுப தார்வேந்தர் மார்பு

**திறை**

2. நேமிநிமிர்தோள் நிலவுதார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவலன் - ஆணையால்
ஏம்மணிப்பூண் இமையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்

**கைக்கிளை**

3. கார்நறு நீலம் கடியகத்து வைகலும்
நீர்நிலை நின்ற தவம்கொலோ - கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் யாமான் வழுதியால்
கொண்டிருக்கப் பெற்ற குணம்

**சோழன்**

**யானைமறம்**

1. கொடிமதில் பாய்ந்து இற்ற கோடும் அரசர்
முடிஇடறித் தேய்ந்த நகமும் - பிடி முன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோள் கிள்ளி களிறு

**களம்**

2. முடித்தலை வெள்ளோட்டு
மூளைநெய்யாகத்
தடித்த குடல்திரியா மாட்டி - எடுத்து எடுத்துப்
போய் விளக்கு அயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்

**கொடை**

3. அந்தணர் ஆவொடு பொன் பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறு ஊர்ந்தார் - எந்தை
இலங்குவுல் கிள்ளி இரேவதி நாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு

சேரன்

**புகழ்**

1. வானிற்கு வையகம் வென்றது வானத்து

மீனிற்கு அனையார் மறமன்னர் - வானத்து

மீன்சேர் மதியனையான் விண்உயர் கொல்லியர்

கோன்சேரன் கோதை என்பான்

**நாடு**

2. அள்ளல் பழனத்து அரக்கு ஆம்பல் வாய் அவிழ

வெள்ளம் தீப்பட்டது எனவெரீஇப் -

புள்ளினம்தம்

கைச்சிறகால் பார்ப்பு ஒடுக்கும்

கவ்வையுடைத்தரோ

நச்சிலைவேல் கோக்கோதை நாடு

**கைக்கிளை**

3. ஏற்று ஊர்தியானும் இகல்வெம்போர் வானவனும்

ஆற்றலும் ஆள்வினையம் ஒத்து ஒன்றின் - ஒவ்வாரே

கூற்றக் கணிச்சியோன் கண்மூன்று இரண்டேயாம்

ஆற்றல்சால் வானவன் கண்.

**அருஞ்சொற்பொருள்**

நேமி நிமிர்தோள் நிலவு தார் - பூமிமையத் தாங்கும் தோள்களில் விளங்குகின்ற

வெற்றி மாலை, ஏம்ம் - பொன், அமையார் - தேவர், நீலம் - குவளை, வாமான் -

தாவுகின்ற குதிரை, வண்டிருக்க நக்கதார்

வண்டுகள் வந்து இருப்பதனாலேயே

மலர்ந்த மலர்களால் கட்டிய மாலை, கல் - மலை, தடித்த

திரண்ட, செம்பியன் -

சோழன், வென்றது - ஒத்தது, அள்ளல் - சேறு, பழனம் - நீர்ப்பொய்கை, அரக்காம்பல்

செவ்வாம்பல், ஏற்றூர்தியான் - காளை ஊர்தியுடைய சிவபெருமான், வானவன் சேரன், கூற்றக் கணிச்சியோன் - காலனைப் போலக் கொலை செய்யும் மழுப்புடைய சிவபெருமான்.

## 2.தமிழ்விடுதூது

சிற்றிலக்கிய வகைகளுள் தூது இலக்கியமும் ஒன்று. இது தலைவன்மேற் காதல் கொண்ட தலைவி தன் காதல் நோயின் துன்பத்தைக் காதலனுக்கு எடுத்துக்கூறி "மாலை வாங்கி வா" என்றும், "தூது சொல்லி வா" என்றும் உயர்திணைப் பொருள்களையோ, அஃறிணைப் பொருள்களையோ தூது விடுவதாகப் புலவர்கள் பாடுகின்றனர். தலைவன் தூது விடுத்ததாக விறலி விடு தூது என்ற ஒரு

மட்டுமே காணப்படுகிறது. தலைவி விடுத்த தூது நூல்களே பெரும்பாலும் க

கிடைக்கின்றன.

## தமிழ்விடுதூது

சிற்றிலக்கிய வகைகளுள் தூது இலக்கியமும் ஒன்று. இது தலைவன்மேற் காதல்

கொண்ட தலைவி தன் காதல் நோயின் துன்பத்தைக் காதலனுக்கு எடுத்துக்கூறி

“மாலை வாங்கி வா” என்றும், “தூது சொல்லி வா” என்றும் உயர்திணைப்

பொருள்களையோ, அஃறிணைப் பொருள்களையோ தூது விடுவதாகப் புலவர்கள்

பாடுகின்றனர். தலைவன் தூது விடுத்த்தாக விறலி விடு தூது என்ற ஒரு நூல்

மட்டுமே காணப்படுகிறது. தலைவி விடுத்த தூது நூல்களே பெரும்பாலும் காணக்

கிடைக்கின்றன.தமிழ்விடுதூது

மதுரையில் கோயில் கொண்டு விளங்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட

பெண் தன் காதல் நோயைக் கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதாக

அமைந்த நூல் தமிழ்விடுதூது என்பதாகும். இந்நூலின் ஆசிரியர் பெயர்

தெரியவில்லை. ஆனால், நூலை ஆராய்ந்து பார்க்கின், அவர் பரந்த தமிழ்நூற்

பயிற்சியும், செந்தமிழ்ப் பற்றும் கொண்டவர் என்பது தெரிகிறது.

இந்நூலில்

தமிழின்

சிறப்போதும்

16

கண்ணிகள்

நமக்குப்

பாடமாக

வைக்கப்பட்டுள்ளன.

1. சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்
தேர்கொண்ட சங்கத் திருந்தோரும் -
போர்கொண்

2. டிசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு
விசையஞ் செலுத்திய மின்னும் - நசையுறவே

3. செய்யசிவ ஞானத் திரளேட்டி லோரேடு
கையி லெடுத்த கணபதியும் - மெய்யருளாற்

4. கூடல் புரந்தொருகாற் கூடற் புலவரெதிர்
பாடலறி வித்த படைவேளும் - வீடகலா

5. மன்னுமூ வாண்டில் வடகலையுந் தென்கலையும்
அன்னைமுலைப் பாலி னறிந்தோறும் -
முன்னரே

6. மூன்றுவிழி யார்முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்

ஈன்றுதரச் சொல்லி னிசைத்தோருந் - தோன்றயன்மால்

7. தேடிமுடி யாவடியைத் தேடாதே நல்லூரிற்

பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி

8. மட்டோலைப் பூவனையார் வார்ந்தோலை சேர்த்தெழுதிப்

பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே

9. ஒல்காப் பெருந்தமிழ்மூன் றோதியருண் மாமுனியும்

தொல்காப் பியமொழிந்த தொன்மொழியும் - மல்காச்சொற்

10. பாத்திரங்கொண் டேபதிபாற் பாய்பசு வைப்பன்னிரண்டு

சூத்திரங்கொண் டேபிணித்த தூயோரும் - நேத்திரமாம்

11.தீதில் கவிதைத் திருமாளிகைத்தேவர்

ஆதி முனிவ ரனைவோருஞ் - சாதியுறும்

11. தந்திரத்தி னாலொழியாச் சார்வினையைச் சாற்றுதிரு

மந்திரத்தி னாலொழித்த வல்லோரும் - செந்தமிழிற்

12. பொய்யடிமை யில்லாப் புலவரென்று நாவலர்சொல்

மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள்

13. காடவருஞ் செஞ்சொற் கழறிற் றறிவாரும்

பாடவருந் தெய்வமொழிப் பாவலரும் - நாவருங்

15.கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள் விக்குரியர்

எல்லாரு நீயா யிருந்தமையாற் - சொல்லாரும்

16. என்னடிக ளேயுனைக்கண் டேத்தினிடர் தீருமென்றுன்

பொன்னடிக ளேபுகலாப் போற்றினேன்

## 3.நந்திக்கலம்பகம்

நந்திக்கலம்பகம் தமிழில்

உருவான கலம்பக இலக்கியங்களில்

ஒன்று. இது

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவ மன்னன் தெள்ளாறு

எறிந்த மூன்றாம் நந்திவர்மன் குறித்துப் பாடப்பட்டது. இதுவே கலம்பக நூல்களில்

காலத்தால் முற்பட்டு விளங்குகிறது. மூன்றாம் நந்திவர்மனின் காலம் கி.பி.825-850

என்பதால் நந்திக் கலம்பகத்தின் காலம் கி.பி.9 ஆம் நூற்றாண்டு ஆகும். காஞ்சி,

மல்லை (மாமல்ல புரம்), மயிலை (மயிலாப்பூர்) ஆகிய நகரங்கள் பற்றி இந்நூலில்

சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளது. சிறந்த சொற்சுவை பொருட்சுவையோடு கற்பனை

வளமும் நிறைந்த இந்நூலின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை.

**நூல் வரலாறு**

நந்திவர்மனிடம் இருந்து அரசைக் கவரும் நோக்கில் அவனது தம்பியால்

ஒழுங்குசெய்யப்பட்டு அறம் பாடுதல் என்னும் முறையில் இப்பாடல்கள் பாடப்பட்டன.

அறம் வைத்துப்பாடிய நூலின் பாடலைத் தற்செயலாகக் கேட்ட நந்தி வர்மன்

அப்பாடலின் சிறப்பில் மனம் பறிகொடுத்து பாடல் முழுவதையும் பாட விரும்பினான்.

நூல் முழுவதையும் கேட்டால் மன்னன் உடல் எரிந்து இறப்பான் என்பதை அறிந்தும்

தமிழின் மீதுள்ள தனியாத காதலால் உயிரையும் பொருட்படுத்தாது, எரியும் பந்தலின்

கீழிருந்து கேட்டு உயிர் இறந்தான் என்று கூறப்படுகிறது. 'நந்தி, கலம்பகத்தால்

மாண்ட கதை நாடறியும்' - என்னும் சோமேசர் முதுமொழி வெண்பா என்னும் நூலின்

வெண்பா வரிகள் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. இதற்கேற்ப இந்நூலிலும் பல

வசைக்குறிப்புகள் இடம் பெறுகின்றன. இந்நூல், மற்ற கலம்பக நூற்களைப்

போலல்லாமல் வரலாற்று நூலாகவே திகழ்கின்றது. உள்ளதை உள்ளவாறு கூறுவது

வரலாறு. உள்ளதை உயர்த்திக் கூறுவது இலக்கியம். மூன்றாம் நந்திவர்மனது

அரசியல் தொடர்பான செய்திகள் நந்திக் கலம்பகத்தில் அதிகமாகக் காணப்படுகிறது.

இவ்விலக்கியத்தில் மூன்றாம் நந்திவர்மனின் வரலாற்றுச் செய்திகளைப் புறத்துறைகள்

வாயிலாகவும், தலைவி தன் மகிழ்ச்சியைக் கூறுவதாக அமைந்து, அகப்பொருள்

சுவையுடனும் விளக்கப்படுகிறது

மூன்றாம் நந்திவர்மனின் வரலாறு குறித்த

கல்வெட்டு, செப்பேட்டு செய்திகளும், நந்திக்கலம்பகத்தில் உள்ள செய்திகளும்

ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படுகின்றன. மேலும் மூன்றாம் நந்திவர்மனின்

கொடைச்சிறப்பு, தமிழ்ப்பற்று, சிவபெருமான் மீது கொண்ட பக்தி, வீரம், அறிவு

போன்ற பண்புகளுடன் அறம், கொடை போன்ற பண்புகளும் நந்திக் கலம்பகத்தில்

மிகவும் போற்றப்படுகின்றன.

## நூல் அமைப்பு

660f155

கடவுளர்க்கு 100, முனிவர்க்கு-95, அரசர்க்கு -90

அமைச்சர்க்கு- 70,வணிகர்க்கு- 50 வேளாளர்க்கு - 30 எனும் அளவில் கலம்பகப் பாடல்கள் அமைய வேண்டும் என்பது விதி. இந்த

அளவினை மீறி கலம்பகங்கள் பாடப்பட்டுள்ளன. நந்திக் கலம்பகத்தில் அகம் ,புறம், ஆகிய துறைகள் கலந்து வர அமையப்பெற்ற போதும் அவற்றுள் அகத்திணைச் செய்திகள் பெரும்பான்மையினதாகவும் புறத்திணைச் செய்திகள் சிறுபான்மையினதாகவும் இடம் பெறுகின்றது. நந்திக் கலம்பகத்தில் 144 பாடல்கள் காணப்படுகின்றன. ஆனால் அரசர் மீது பாடப்பெறும் கலம்பகம் 90 பாடல்களுடையதாய் இருக்க வேண்டும் என்பது நியதியாகும். எனவெ, இதில் உள்ள அதிகப்படியான 54 பாடல்கள் பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இந்நூலில் நந்தி வர்மனின் தெள்ளாறு வெற்றியைப் பற்றி மட்டும் 16 பாடல்களில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.கொற்ற வாயில் முற்றம், வெறியலூர், வெள்ளாறு, தெள்ளாறு போன்ற பல்வேறு போர்க்களங்களைப் பற்றிக் கூறும் சிறந்த வரலாற்று நூலாகவும் இது திகழ்கிறது.

நந்திக் கலம்பகத்தின் 61, 96, 100, 105, 110 ஆகிய பாடல்கள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

1. **பாட்டுடைத் தலைவன் வீரச் சிறப்பு**

திருவின் செம்மையும் நிலமகள்
உரிமையும் பொதுவின்றி ஆண்ட
பொலம்பூண் பல்லவ! தோள் துணை ஆக
மாவெள் ளாற்று மேவலர்க் கடந்த
அண்ணால் நந்திநின் திருவரு நெடுங்கண்
சிவக்கும் ஆகின் செருநர் சேரும் பதிசிவக்
கும்மே நிறங்கிளர் புருவம் துடிக்கின்
நின்கழல் இறைஞ்சா மன்னர்க் கிடந்துடிக்
கும்மே மையில் வாளுறை கழிக்கு மாகின்
அடங்கார் பெண்டிர் பூண்முலை முத்தப்
பூண்கழிக்கும்மே கடுவாய் போல்வளை
அதிர நின்னொடு மருவா மன்னர் மனம்
துடிக் கும்மே மாமத யானை பண்ணின்
உதிர மன்னுநின் எதிர்மலைந் தோர்க்கே.

2. **தலைவி கார்ப்பருவங்கண்டு வருந்துதல்**

சிவனை முழுதும் மறவாத சிந்தையான்

செயமுன் உறவு தவிராத நந்தி யூர்க்

குவளை மலரின் மதுவாரும் வண்டுகாள்

குமிழி சுழியில் விளையாடு தும்பியே!

அவனி மழைபெய் குளிர்காலம் வந்ததே

அவரும் அவதி சொனநாளும் வந்ததே

கவலை பெரிது பழிகாரர் வந்திலார்

கணவர் உறவு கதையாய் முடிந்ததே.

**3.காலம்**

அன்னையரும் தோழியரும் அடர்ந்துபொருங் காலம்

ஆனிபோய் ஆடிவரை ஆவணியின் காலம்

புன்னைகளும் பிச்சிகளும் தங்களின்ம கிழ்ந்து

பொற்பவள வாய்திறந்து பூச்சொறியும் காலம்

செந்நெல்வயற் குருகினஞ்சூழ் கச்சிவள நாடன்

தியாகியெனும் நந்திதடந் தோள்சேராக் காலம்

என்னையவ அறமறந்து போனாரே தோழி!

இளந்தலைகண் டேநிலவு பிளந்தெரியும் காலம்.

**4.மேகவிடுதூது**

ஓடுகின்ற மேகங்காள்! ஓடாத தேரில் வெறும்

கூடு வருகுதென்று! கூறுங்கள் - நாடியே

நந்திச்சீ ராமனுடை நல்நகரில் நல்நுதலைச்

சந்திச்சீர் ஆமாகில் தான்.

**5.கையறுநிலை**

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்

மறிகடல் புகுந்ததுன் ககானுறு புலியை
அடைந்ததுன் வீரம்

கற்பகம் அடைந்ததுன் கரங்கள்

தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்

செந்தழல் அடைந்ததுன் தேகம்

நானும் என்கலியும் எவ்விடம் புகுவேம்

நந்தியே நந்தயா பரனே.

**அருஞ்சொற்பொருள்**

திரு - திருமகள், மேலவர் - பகைவர், செருநர் - பகைவர், பதி - நாடு, கடுவாய் -

வெற்றிமுரசு, தும்பி

கருவண்டு, அவதி சொன்ன நாள்

குறித்துக் கூறிய காலம்,

அடர்ந்து பொருங்காலம் - நெருங்கி வந்து எமைமை வைகின்ற காலம், பிச்சி - சாதி

மல்லிகை, குருகு இனம்

பறவை இனம், இளந்தலை - என் எளிய நிலை, நந்தி

சீராமன் - இராமபிரான் போன்ற நந்தி மன்ன்ன், மறிகடல் - அலைகள் மோதுகின்ற

கடல், கலி - வறுமைத் துன்பம், தயாபரன் - அருளாளன்.

**முற்றும்**